பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 29 ஞாயிற்றுக்கிழமை (12~05~2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:168

# தெற்கு இனவாத சக்திகளைக் கண்டித்து தமிழர் பகுதிகளில் எதிர்ப்பு நடவடிக்கை

## புலிகள், கூட்டமைப்பினர் இணைந்து பெருமெடுப்பில் முன்னெடுக்கத் திட்டம்

கிளிநொச்சி,மே12

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராக தெற்கில் கிளம்பியுள்ள இனவாத சக்திகளின் செயற்பாடுகளைக் கண்டித்து வடக்கு - கிழக்கு முழுவதும் எதிர்ப்பு ஆர்பாட்டப் பேரணிகளையும், கூட்டங்களையும் பெருமெடுப்பில் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது,**

**விடுதலைப் புலிகளும் தமிழ்க்கட்சி கூட்டமைப்பினரும் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.**

**விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை தமிழ்க்கட்சிக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் வன்னியில் நேற்று சந்தித்துப் பேசிய சமயம் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.**

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் நடுவப் பணியகத்தில் நேற்றுக்காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இந்தப் பேச்சுக்கள் நண்பகல் 1மணி வரை இடம்பெற்றன.

கூட்டமைப்பின் சார்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி, ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ்.(சுரேஷ் அணி) பிரமுகர்களான சிவசக்தி ஆனந்தன், எஸ்.ரகுநாதன் ஆகியோரும்-

(10ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்புப் பிரதிநிதிகள் பிரதமரை சந்தித்துப் பேசுவர்

கொழும்பு,மே12

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாட்டை முறையாக அமுல்செய்தல் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு எதிர்வரும் 21ஆம் திகதி பேச்சு நடத்த இருக்கின்றது.

தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவே பிரதமருடன் பேச்சு நடத்தவிருக்கின்றது.

இந்தப் பேச்சுக்களின் போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது, புலிகள் மீதான தடையை நீக்குவது உட்பட பலதரபபட்ட விடயங்கள் குறித்து ஆராயப்படவிருப்பதாகத் தெரிகின்றது.

அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், சட்ட மா அதிபர் கே.சி.கமலசபேசன் ஆகியோரும் இந்தப் பேச்சில் கலந்துகொள்வர். (ம-3-6-9)

## அமெரிக்க நாசகாரி கொழும்பு வந்தது

அமெரிக்க யுத்த நாசகாரிக் கப்பலான 'யு.எஸ்.எஸ். சைட்ஸ்' நேற்றுக் கொழும்பு வந்துசேர்ந்துள்ளது.

கொழும்புத் துறைமுகத்தில் நான்கு தினங்கள் தரித்து நிற்கும் இக்கப்பலில் இரு நூறு அமெரிக்க கடற்படையினரும் வந்துள்ளனர்.

கடந்த இரு வாரங்களில் கொழும்பு வரும் இரண்டாவது அமெரிக்கக் கப்பல் இதுவாகும். (ம-3-6)

# சமாதான முயற்சிகள் குறித்த இறுதி முடிவு 90நாள்களுக்குள்!

## எட்டப்பட்டுவிடும் என்கிறார் பிரதமர்



கொழும்பு,மே12

தற் சமயம் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் தொடர்பான இறுதித்தீர்மானம் அடுத்த 90நாள்களுக்குள் எட்டப்படும்.

- இப்படி நம்பிக்கை வெளியிட்டார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

மாத்தறையில் ஒரு கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள விகாரையை சம்பிரதாயபூர்வமாக நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே பிரதமர் இப்படிக் கூறினார்.

அங்கு உரையாற்றுகையில் பிரதமர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளின் தாயகக் கோட்பாட்டை அரசு ஒருபோதும் அங்கீகரிக்கப்போவதில்லை. வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்தும் இதுவரை உடன்பாடு எதுவும் எட்டப்படவில்லை.

சமாதான முயற்சிகளுக்கு ஆதரவைத் திரட்டும் வகையில் தூதர்களை பல நாடுகளுக்கும் அனுப்பியுள்ளேன். அத்துடன் பொதுநலவாய நாடுகளுடன் வெளிவிவகார அமைச்சர் பேச்சுக்களை நடத்திவருகின்றார்.

தற்போதைய சமாதான முயற்சிகளின் வெற்றிக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் கவனத்தையும் பெறுவதற்காகவே இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளேன்.

சமாதான முயற்சிகள் வெற்றிபெறுவதற்கு சகல கட்சிகளுடனும் உடன்பாடு காண நடவடிக்கை எடுத்துள்ளேன். ஆனால் பிரதான அரசியல் கட்சிகள் இணக்கத்துக்கு வரப் பின்னடிக்கின்றன. இனப்பிரச்சினைக்கு துரிதமான தீர்வைக்காணும் வழியில் அதுவே தடைக்கல்லாக இருக்கின்றது - என்றார் அவர்.

(ம-3-6-9)

## ஓமந்தை ஊடாக

## காலை 7.30 மணிமுதல் பயணம் செய்ய அனுமதி

கிளிநொச்சி,மே12

ஏ-9 கண்டி வீதி ஊடாகக் காலை 7.30 மணிமுதல் போக்குவரத்தை மேற்கொள்ள நேற்று முதல் அனுமதிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் ஓமந்தையில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களும் படை அதிகாரிகளும் சந்தித்துக் கலந்துரையாடியதன் பயனாக நேற்று இந்த நடைமுறை அமுலுக்கு வந்துள்ளது.

வவுனியாவில் இருந்து ஓமந்தை ஊடாக நேற்றுக் காலை 7.30 மணி முதல் வாகனங்கள் உள்ளே வர அனுமதிக்கப்பட்டன என்றும் -

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். படைகளின் தளபதியாக ஜெனரல் பொன்சேகா

கொழும்பு,மே12

யாழ். படைகளின் தளபதியாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா கடந்த வியாழக்கிழமை பதவி ஏற்றுள்ளார்.

பலாலியில் சம்பிரதாயபூர்வமான சமயக் கிரியைகளின் பின்னர் அவர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



முப்பது நாளில முடியவேண்டியதே இப்பத்தான் ஆரம்பம் எண்டா மற்றதெல்லாம் எப்பவோ...?

## தடை நீக்கத்தை எதிர்த்து பிக்குகள் நேற்றுப் பேரணி

கொழும்பு,மே12

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக்கூடாது என்று கோரி ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிக்குகள் நேற்று கொழும்பில் பேரணி மற்றும் எதிர்ப்புக் கூட்டம் என்பவற்றை நடத்தினர்.

தேசிய பிக்குமார் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நேற்று மாலை 4 மணிக்கு மருதானை விகாரையில் இருந்து ஆரம்பமான பேரணி, விகாரமாதேவி பூங்காவை .அடைந்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிரான சுலோகங்கள் அடங்கிய

(10ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் சமாதான முயற்சிக்கு தான் ஆதரவு என்கிறார் பௌசி

கொழும்பு,மே12

நாட்டின் முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அரசு மேற்கொள்ளும் முயறசிகளுக்கு தான் பூரண ஆதரவை வழங்கப்போவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

நாட்டின் முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, இரு வருடங்களுக்கு தேசிய அரசு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

மருதானையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையி

(10ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு, கல்வி அமைச்சுகளின் அதிகாரிகள் குழு நாளை வருகிறது

### படையினர் இருக்கும் பாடசாலைகள் விவரம் திரட்டுவதற்காக

கொழும்பு,மே12

பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று நாளை திங்கட்கிழமை யாழ். குடாநாட்டுக்கு வருகை தரவுள்ளது. இந்தக்குழுவில் கல்வி அமைச்சின் உயரதிகாரிகள் சிலரும் அடங்கியிருப்பர்.

குடாநாட்டில் படையினர் நிலை கொண்டுள்ள பாடசாலைகள் குறித்த விவரங்களைத் திரட்டுவதற்காகவே இந்தக்குழு இங்கு வருகை தருகின்றது.

படையினர் தங்கியிருக்கும் பாடசாலைகளுக்கு நேரடியாகச் சென்று இந்தக்குழு நிலைமைகளை நேரில் ஆராயும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ் விஜயத்தைத் தொடர்ந்து

(10ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நேற்று நடைபெற்ற அமெச்சூர் மெய்வன்மைச் சங்க ஏற்பாட்டிலான மெய்வன்மை சட்டவிதிகள் தொடர்பான விரிவுரைகளின் ஆரம்ப நிகழ்வில் யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.அருணகிரிராஜா உரையாற்றுவதையும் அகில இலங்கை அமெச்சூர் சங்க செயலாளர் எஸ்.வைத்தியதிலக மற்றும் ஆரம்பிப்பாளர் என்.வைரவநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# மெய்வன்மை குறித்த செயலமர்வு நேற்று குடாநாட்டில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே12

இலங்கை அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தின் ஏற்பாட்டில் மெய்வன்மை குறித்த செயலமர்வு நேற்று யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் ஆரம்பித்தது.

யாழ்ப்பாண கல்வி வலய உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.அருணகிரிராஜா தலைமையில் நடைபெற்ற முதல்நாள் செயலமர்வில் அகில இலங்கை அமெச்சூர் மெய்வல்லுநர் சங்க செயலாளர் எஸ்.வைத்தியதிலக, இலங்கை அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தைச் சேர்ந்த என்.வைரவநாதன் ஆகியோர் தடகள விளையாட்டுக்களின் சட்டதிட்டங்கள் தொடர்பாக விளக்கவுரையாற்றினர்.

தடகள விளையாட்டுக்களின் சட்ட நுணுக்கங்கள் தொடர்பான படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது.

பாடசாலைகள் மற்றும் விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த பலரும் இச்செயலமர்வில் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தச் செயலமர்வு இன்றும் நடைபெறுகிறது. (ஒ-4-86)

## வலிகாமம் வலய பாடசாலை அதிபர்கள் கூட்டம்

வலிகாமம் வலயத்தில் உள்ள நான்கு கோட்டங்களுக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்துப் பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ம-3)

# தகுதியானோருக்கு மட்டுமே நிவாரணம் வழங்கப் பணிப்பு!

யாழ்ப்பாணம்,மே12

நிவாரணம் பெறுவதற்கான முழுமையான தகுதி உடையவர்களுக்கு மட்டுமே இந்த மாதம்முதல் நிவாரணம் வழங்கப்படவேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை யாழ்.செயலகத்தால் பிரதேச செயலர்கள் ஊடாக சகல கிராம அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது நிவாரணம் பெற்றுவரும் குடும்பங்களில் -

★ அரச நிறுவனங்களில் பணிபுரிவோர் - இதில் சமயா சமய ஊழியர்களும் அடங்குவர்.

★ மாதாந்தம் 750 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுபவர்கள்.

★ வெளிநாடுகளில் குடும்ப அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்கள்.

★ வியாபார நிறுவனங்கள் வைத்து வருமானம் பெறுவோர்.

★ ட்ராக்டர் மற்றும் லாண்ட் மாஸ்ரர், லொறி, கார், மினிபஸ், ஓட்டோ போன்ற வாகனங்களை சொந்தமாக வைத்துத் தொழில்புரிவோர்.

★ சொந்தமாக வள்ளம் வைத்திருப்போர், சம்மட்டிமார்கள்.

★ தொலைத் தொடர்பு நிறுவனம் வைத்திருப்போர், வீடுகளில் தொலைபேசி வைத்துள்ளோர்.

★ பெரும் விவசாயிகள்.

★ வீடுகளை வாடகைக்கு விடுபவர்கள்.

★ புதிதாகத் திருமணமானவர்கள்.

★ கூட்டுத்தாபனம், அரச சார்பு நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள்.

ஆகியவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தை நிறுத்தி, மேற்கண்ட தகுதிகள் அற்ற குடும்பங்களுக்கு மட்டுமே நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று அந்தச் சுற்றிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் இதனை நடைமுறைப்படுத்தும்படியும் கிராம அலுவலர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் பல நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு இம்முறை நிவாரணம் கிடைக்காமல்போகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-180)

# வவுனியா கல்வியியல் கல்லூரி சிங்கள மாணவர்கள் வந்தனர்

யாழ்ப்பாணம்,மே12

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் இருந்து சமாதான யாத்திரையாக நேற்றுயாழ்ப்பாணம் வநது சேர்ந்த சிங்கள மாணவர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

நேற்று மாலை 4 மணியளவில் யாழ் தேசிய கல்வியியல் கல்லூரிகக்கு வந்து சேர்ந்த சிங்கள மாணவர்களை இன்முகத்துடன் வரவேற்ற தமிழ் மாணவர்கள் அவர்களுடன் கலந்துரையாடினர்.

மூன்று தினங்கள் குடாநாட்டில் தங்கி நிற்கவுள்ள இவர்கள் யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி மாணவர்களுடனும், யாழ். மத்திய கல்லூரி மாணவர்களுடனும் கரபந்தாட்டம் மற்றும் வலைபந்தாட்டப் போட்டிகளிலும் பங்குபற்றவுள்ளனர். (ம-6)

## மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம்,மே12

கொக்குவில் மகமாஜி சனசமூக நிலைய முன்பள்ளி கட்டட நிதிக்காக நடத்தும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி சவாரித்திடலில் நடைபெறவுள்ளது. (ம-4)

# வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை

## அமைச்சர் ஜயலத் ஆதங்கம்

யாழ்ப்பாணம்,மே12

குடாநாட்டு மக்களுக்கு அளித்த சில உறுதிமொழிகளை இன்னும் நிறைவேற்றமுடியவில்லையே என்று புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா ஆதங்கம் வெளியிட்டார்.

குடாநாட்டில் தமது அமைச்சின் பணிகள் தொடர்பாக உதயனுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதானத்தை நிலைநிறுத்தவும் குடாநாட்டில் அபிவிருத்தியை மேற்கொள்ளவும் எனது அமைச்சு பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

குடாநாட்டின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீவுகாண பல உறுதிமொழிகளை வழங்கியிருந்தேன். அவற்றில் சிலவற்றை நடைமுறைப் படுத்தமுடியவில்லை.

யாழ். விமானச் சேவைக்கான கட்டணத்தை 3ஆயிரம் ரூபாவாகக் குறைக்க முயற்சிசெய்தேன். உள்ளூர் விமானசேவைகள் திணைக்களத்தின் ஒத்துழைப்புக் கிடைக்காததால் அது சாத்தியமாகவில்லை.

யாழ். பொதுநூலகத்தை இம்மாதத்தில் திறக்க நடவடிக்கை எடுத்தேன். நூலகத்தின் இறுதிக் கட்டப் பணிகளுக்குத் தேவையான ஏழு கோடி ரூபாவைப் பெறுவதற்கு அமைச்சரவைக்குச் சிபார்சு செய்தேன். அந்த நிதியை இன்னும் பெறமுடியவிலலை. இதனால் நூலகத்தை இம்மாதத்தில் திறக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது - என்றார் அவர். (ம-3)

## தொழில்நுட்ப நிறுவன அதிகாரிகள் குழு நாளை வருகிறது

உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் வசந்த ஜெயசிங்க தலைமையிலான குழுவொன்று நாளை திங்கட்கிழமை யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு வருகை தரவுள்ளது.

1996ஆம் ஆண்டு யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இங்கு முதன்முதலில் வருகைதரும் உயர் மட்டக் குழு இதுவாகும்.

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தை நேரில் பார்த்து அதன் குறைபாடுகளையும் வசதிகளையும் கண்டறிவதே இக்குழுவின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-8-13)

# அனுமதி பெறாது இயங்கி வந்த மதுபான நிலையங்களுக்கு மூடுவிழா

## நேற்று மட்டும் 6 கடைகள் பூட்டப்பட்டன

யாழ்ப்பாணம்,மே12

குடாநாட்டில் அனுமதிப்பத்திரங்கள் இன்றி இயங்கிவந்த ஆறு மதுபான விற்பனை நிலையங்கள் நேற்று மதுவரிப் பரிசோதகர்களால் இழுத்து மூடப்பட்டன.

யாழ்.பிராந்தியத்துக்கான உதவி மதுவரி ஆணையாளரின் உத்தரவின்படி யாழ்.மாவட்ட மதுவரி அத்தியட்சகரின் தலைமையில் சென்ற மதுவரிப் பரிசோதகர்கள் மயிலங்காடு, கரந்தன், மல்லாகம், நீர்வேலி, அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் ஆகிய பிரதேசங்களில் அனுமதிப் பத்திரம் இன்றி இயங்கிவந்த ஆறு மதுபான விற்பனை நிலையங்களை மூடினர்.

இரண்டு கசிப்பு உற்பத்தியாளர்களையும் அவர்கள் கண்டுபிடித்தனர். அவர்களிடமிருந்து சட்டவிரோத மதுபான வகைகளை கைப்பற்றிய மதுவரிப் பரிசோதகர்கள் மதுபானங்களை சட்டவிரோதமாக விற்பனை செய்துவந்த அனைவரையும் நாளை திங்கட்கிழமை நீதிமன்றில் ஆஜராகுமாறு கூறினர்.

இதேவேளை -

தாம் யாழ்.மாவட்டத்தில் அனைத்துப் பகுதியிலும் திடீர் பரிசோதனைகளை நடத்தி குடாநாட்டில் இயங்கும் சட்டவிரோத மதுபான விற்பனை நிலையங்கள் அனைத்தையும் மூடவுள்ளதாகவும்-

அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாகவும்-

மதுவரிப்பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் குடாநாட்டில் 28 மதுபான விற்பனை நிலையங்கள் மட்டுமே அனுமதி பெற்று இயங்குகின்றன எனவும் -

எதிர்வரும் காலத்தில் எவருக்குமே மதுபான விற்பனை நிலையங்களைப் புதிதாக ஆரம்பிப்பதற்குத் தாம் அனுமதி வழங்கப்போவதில்லை எனவும் -

யாழ்.பிராந்தியத்துக்கான உதவி மதுவரி ஆணையாளர் சி.சிவானந்தன் தெரிவித்தார். (ம-6)

## இன்று பரீட்சை

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானமாணி பட்டப் படிப்பு பரீட்சைக்கு தெரிவு செய்யப் படவுள்ள யாழ்ப்பாண மாணவர்களுக்கான பரீட்சைகள் இன்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இந்த பரீட்சைக்கு தோற்றவுள்ள சுமார் 150 மாணவர்களுக்கும் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் -

இன்று நடைபெறவுள்ள கணனி விஞ்ஞானம், மற்றும் கணித பாடப் பரீட்சைகள் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகவும் -

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய இயக்குநர் ஆ.ஞானேந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை - மேற்படி பரீட்சை கொழும்பில் நடைபெறும் என்று பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் மாணவர்கள் மேற்படி பரீட்சைக்கு இங்கேயே தோற்றமுடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ம-6)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,மே12

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்தப்பட்டுவரும் வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி மற்றும் இறுதி ஆட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளன.

அரையிறுதி ஆட்டத்தில் கலந்து கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி எதிர் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி.

★ நல்லூர் பிரதேச செயலக அணி எதிர் பருத்தித்துறை பிரதேச செயலக அணி. (86)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம் மாவட்ட கல்வி வலயங்களுக்கிடையே தெரிவு செய்யப் பட்ட பாடசாலை அணிகளிடையேயான 15,17,19வயதுப் பிரிவு கரப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நல்லூர் சட்டநாதர் ஆலயத்திற்கு அருகில் உள்ள மைதானத்தில் இடம்பெறவுளளது. (ம-86)

☆ ☆ ☆

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழகம் நடத்தும் டாகடர் சிவகுரு ஞாபகார்த்த சுற்றுகேடயத்திற்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிமுதல் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ யாழ். பல்கலைக்கழக வி.க. எதிர் நாவாந்துறை கலைவாணி வி.க.

★ ஊரெழு றோயல் வி.க. எதிர் கரவெட்டி கலட்டி வி.க. (ம-86)

☆ ☆ ☆

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் நாளைமுதல் மூன்று தினங்கள் காலை 8 மணிமுதல் யாழ் துரையப்பா மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

ஆண்கள், பெண்களுக்கான ஐயாயிரம் மீற்றர் ஓட்டம் நாளையும் பத்தாயிரம் மீற்றர் ஓட்டம் நாளை மறுதினமும் ஆயிரத்து 500 மீற்றர் ஓட்டம் எதிர்வரும் புதன்கிழமையும் இடம் பெறும். (ம-3)

## போராட்டம் குறித்து ஆலோசனை

யாழ்ப்பாணம்,மே12

வலி.வடக்குப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ள பொதுமக்களை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி எதிர்வரும் புதன்கிழமை வலி.வடக்கு பிரதேச செயலகம் முன்பாக நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள உண்ணாவிரதப் போராட்டம் குறித்து ஆலோசனை நடத்துவதற்காக வலி.வடக்குப் பகுதியில் இயங்கும் பொது நிறுவனங்களை நாளை பி.ப.3மணிக்கு தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத்திற்கு அருகில் ஒன்றுகூடுமாறு வலி.வடக்கு புனர்வாழ்வுக் கழகம் அழைப்புவிடுத்துள்ளது. (ஒ-8)


2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 09 - 12 - 1927

விண்ணில் 04 - 05 - 2000

அமரர் சின்னத்தம்பி பொன்னுராஜா

திதி: 12.05.2002

பாசத்துடன் எம்மை பாரினில் வளர்த்தவரே!
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

958/19 தலையாழி,
நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம். (3693)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# இயற்கையின் சீற்றங்களால் கிழக்காபிரிக்காவில் பலர் பலி!

லண்டன்,மே12

வழக்கத்துக்கு மாறான அதிகூடிய வெப்பநிலை மற்றும் பலத்த மழை ஆகியவற்றால் கிழக்காபிரிக்காவில் கடந்த இரு வாரங்களில் 112 பேர் உயிரிழந்துள்ளனர்.

றுவாண்டா, கென்யா, புருண்டி, தன்சானியா மற்றும் உகண்டாவில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் காரணமாக ஆயிரக்கணக்கானவர்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

வழமையாக கிழக்காபிரிக்கப் பிராந்தியத்தில் தற்போது மழைக் காலமாக உள்ளபோதும் தற்போதைய மழை வழக்கத்திலும் அதிகமாக உள்ளதாகக் கூறப்படுகிறது. இயற்கைச் சீற்றத்தால் றுவாண்டாவே அதிக அழிவைச் சந்தித்துள்ளது. கடந்த 10 நாள்களில் அங்கு 50பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் நிலச்சரிவுகளில் சிக்கியவர்களாவர்.

கென்யாவில் நிலச்சரிவுக்குள் புதைந்து 15பேர் இறந்துள்ளனர்.

இதேசமயம் நைரோபியில் கடும் வரட்சி காரணமாக குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.



வெள்ளக் காடாகக் காட்சி தரும் றுவாண்டா வீதிகளில் ஒன்று

தன்சானியாவின் தென்பகுதியில் கடும் வெப்பம் காரணமாக தந்தையும் மகனும் உயிரிழந்துள்ளனர். (ஒ)

# அமெரிக்காவில் மீண்டும் 'அந்திரெக்ஸ்' கிருமி பீதி!

வாஷிங்ரன்,மே12

அமெரிக்க மத்திய வங்கியின் தபால் பிரிவில் அந்திரெக்ஸ் கிருமிகள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அமெரிக்காவில் மீண்டும் அந்திரெக்ஸ் பீதி எழுந்துள்ளது.

அமெரிக்காவில் கடந்த ஆண்டு கடிதங்கள் மூலம் அந்திரெக்ஸ் கிருமிகள் பரப்பப்பட்டதில், அந்தக் கிருமிகள் தாக்கி 5பேர் உயிரிழந்தனர்.

இதனையடுத்து பிரதான அலுவலகங்களில் அந்திரெக்ஸ் சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறான சோதனை அமெரிக்க மத்திய வங்கியில் மேற்கொள்ளப்பட்ட போது, வங்கிக்கு வந்த 20 தபால்களில் அந்திரெக்ஸ் கிருமிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தை ஆரம்பித்த பின்னரே, கடந்த ஆண்டு அந்திரெக்ஸ் கிருமிகள் பூசப்பட்ட கடிதங்கள் அமெரிக்காவின் பிரதான அலுவலகங்கள் பலவற்றுக்கு அனுப்பப்பட்டிருந்தன. அதனால் இது தீவிரவாதிகளின் செயலாக இருக்கக்கூடும் என்று சந்தேகிக்கப்பட்டது.

இந்தநிலையில் மத்திய வங்கிக்கு வந்த கடிதங்களில் மீண்டும் அந்திரெக்ஸ் கிருமிகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதால் அச்சம் பரவியுள்ளது. (ஒ)



அந்திரெக்ஸ் சோதனையில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்கள்


# லண்டன் ரயில் விபத்தில் 5பேர் பலி!

லண்டன்,மே12

பிரிட்டிஷ் தலைநகர் லண்டனில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ரயில் விபத்து ஒன்றில் ஐந்துபேர் கொல்லப்பட்டுள்ளனர். 15பேர் படுகாயமடைந்துள்ளனர். 76 பேர் சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

தண்டவாளத்தை விட்டு விலகிய ரயில் பாலம் ஒன்றுடன் மோதியதாலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. ஆயினும் ரயில் சாரதி காயம் எதுவும் இன்றி தப்பியுள்ளார்.

ஹெரால் பகுதியில் இருந்து நண்பகல் 12.45 மணிக்கு புறப்பட்ட ரயிலே விபத்தில் சிக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



லண்டனில் விபத்துக்குள்ளான ரயில்

## ஈராக் அதிபராகப் பதவியில் நீடிக்க

# சர்வஜன வாக்கெடுப்பை எதிர்கொள்கிறார் சதாம்

பக்தாத்,மே12

ஈராக்கில் சதாம் ஹுசைன் அதிபர் பதவியில் தொடர்வதற்கு மக்கள் அங்கீகாரத்தைப் பெறும் வகையில் இந்த வருட இறுதியில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

ஈராக் புரட்சிகர கட்டளைக் குழுவின் உதவித் தலைவரும், அதிபர் சதாமுக்கு அடுத்த நிலையில் உள்ள தலைவருமான எஸாட் இப்ராகிம் இத்தகவலை வெளியிட்டார்.

1979ஆம் ஆண்டிலிருந்து ஈராக்கின் அதிபராகப் பதவி வகித்து வரும் சதாம் ஹுசைன், 1995ஆம் ஆண்டில் இத்தகைய வாக்கெடுப்பை எதிர்கொண்டார். அப்போது அவருக்கு ஆதரவாக 99சதவீத வாக்குகள் கிடைத்தன.



65வயதான சதாம் ஹுசைன் அதிபர், பிரதம மந்திரி, இராணுவத் தளபதி, நாட்டின் அரசியல் கொள்கைகளை வகுக்கும் புரட்சிகர கட்டளைக் குழுவின் தலைவர், பாத் கட்சியின் செயலாளர் நாயகம் ஆகிய பதவிகளை வகித்து வருகிறார்.

1980இல் ஈரானுடனான போரிலும், 1989இல் குவைத்தை ஈராக்கியப் படைகள் ஆக்கிரமித்ததால் ஏற்பட்ட வளைகுடா யுத்தத்திலும் நாட்டை வழிநடத்தியவராவார்.

தற்போது ஐ.நாவின் கடுமையான தடைகளால் பொருளாதார நெருக்கடிக்குள் ஈராக் சிக்கியுள்ள சமயத்தில் சர்வஜன வாக்கெடுப்பை சதாம் எதிர்கொள்ளவுள்ளார். (ஒ)

## 15வருடங்களாக தொடரும் தொலைக்காட்சித் தொடர்

மெல்போர்ன்,மே12

'நெய்பேர்ஸ்' (Neighbours) என்ற ஆங்கிலத் தொலைக்காட்சித் தொடரின் 4ஆயிரமாவது கதைப் பகுதி கடந்த வெள்ளிக்கிழமை அவுஸ்திரேலியாவில் வெளியிடப்பட்டது.




மெல்போர்ன் நகரைக் களமாகக் கொண்ட இந்தத் தொடர் 1985ஆம் ஆண்டுமுதல் சுமார் 50க்கும் மேற்பட்ட நாடுகளின் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகி வருகிறது.

இந்தத் தொடரை தினமும் ஒரு கோடி இருபது இலட்சம் ரசிகர்கள் கண்டுகளிப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இத்தொடரில் கடந்த 15வருடங்களாக நடித்துவருபவர் இயன் ஸ்மித் என்பவராவார். (ஒ)

## 'அல் ஜெஸீரா'வுக்கு பஹ்ரெய்னில் தடை

கடார்,மே12

பஹ்ரெய்னில் அல் ஜெஸீரா தொலைக் காட்சிக்கு தடை விதிககப்பட்டுளளது. இஸ்லாமியத் தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் மற்றும் அவரது அல்கெய்டா அமைப்பின் செய்திகளை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்திய அல்ஜெஸீரா தொலைக்காட்சி அரபு நாடான பஹ்ரெய்னில் தடை செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## தென்னாபிரிக்காவில் பொலித்தீன் பைகள் உற்பத்திக்குத் தடை!

கேப்டவுண்,மே12

தென்னாபிரிக்காவில் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்காக, பொலித்தீன்பை உற்பத்தியை அந்நாட்டு அரசு தடை செய்துள்ளது. தடையை அமுல்படுத்த ஒருவருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (ஒ)

# நைஜீரிய கலவரத்தில் 15பேர் மரணம்!

நைஜீரியாவின் தென் கிழக்குப் பகுதியில் இருபழங்குடி இனங்களிடையேயான மோதலில் 15பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பெற்றோலிய வளம் மிக்க நிலப்பரப்பை உடைமையாக்குவது தொடர்பாகவே இந்த மோதல் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

சில நாள்களுக்கு முன்னதாக ஓர் இனத்தினர், மற்றோர் இனத்தினரின் பிரதேசத்துக்குள் நுழைந்து, வீடுகளுக்குத் தீயிட்டதால் தொடங்கிய வன்முறைகள் இப்போதும் தொடர்கின்றன.

உள்ளூர் அரசியல் தலைவர்கள் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். (ஒ)

# ரஷ்யாவுக்காக உளவு பார்த்த எவ்.பி.ஐ. அதிகாரிக்கு ஆயுள்சிறை

வாஷிங்ரன்,மே12



ரொபேர்ட் ஹன்சன்

ரஷ்யாவுக்காக சுமார் இருபது வருடங்களாக உளவு பார்த்த ரொபேர்ட் ஹன்சனுக்கு ஆயுள்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

25 வருடங்களாக அமெரிக்க புலனாய்வு நிறுவனம் எவ்.பி.ஐயில் அதிகாரியாகப் பணியாற்றிய ஹன்சன் 20வருடங்களாக ரஷ்யா வுக்காக உளவுப் பணிகளில் ஈடுபட்டுவந்தமை தெரியவந்ததையடுத்து கடந்த ஆண்டு கைதுசெய்யப்பட்டார்.

அமெரிக்க இராணுவ ரகசியங்களை, வைரம் மற்றும் பல லட்சம் டொலர்களுக்கு ரஷ்யாவிடம் அவர் விற்றிருப்பது விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டதையடுத்தே அவருக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது. சோவியத் யூனியனுக்கும், பின்னர் ரஷ்யாவுக்கும் உளவாளியாக அமெரிக்க புலனாய்வு அதிகாரியே பணியாற்றியிருந்தது அமெரிக்க வரலாற்றின் மிகப்பெரிய துரோகமாக அமெரிக்கர்களால் உணரப்பட்டது. ஹன்சன் எவ்வித எதிர்ப்புமின்றி விசாரணைக்கு ஒத்துழைத்ததாலேயே அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி புஸ்பவதி சுவேந்திரராஜா

கொக்குவில் மேற்கு திருமதி புஸ்பவதி சுவேந்திரராஜா 10.05.2002 வெள்ளிக்கிழமை பிரான்ஸில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் சுவேந்திரராஜாவின் அன்பு மனைவியும் வாசுகி, வனிதா, வத்சலா, விஜிதா, வனஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும் பஞ்சலிங்கம், தவராசகுலசிங்கம், இளங்கோவன், தேவரட்ணம் ஆகியோரின் மாமியாரும் பிரகாஷ், பிரவீணா, கஜீவன், மிலனி, விதுஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
முத்தையா மகேந்திரராஜா
(சிறி)

(3683)

## திருமதி பொன்னம்மா செல்லையா

கோவிலாக்கண்டி மத்தியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி பொன்னம்மா செல்லையா நேற்று (11.05.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை செல்லையாவின் அன்பு மனைவியும் நகுலேஸ்வரன் (ஆஸ்திரேலியா), அருளானந்தம் (நீர்ப்பாசனத் திணைக்களம், யாழ்ப்பாணம்), தேவராசா (ஆஸ்திரேலியா), நகுலேஸ்வரி (யாழ்ப்பாணம்), யோகேஸ்வரி (நீர்வேலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சித்திரலேக்கா (ஆஸ்திரேலியா), தனலட்சுமி (ஆவரங்கால்), திருமாபத்தினி (ஆஸ்திரேலியா), ராஜகுமார் (ஆசிரியர், புங்குடுதீவு மகா வித்தியாலயம்), தேவராசா (சாவகச்சேரி பிரதேச சபை) ஆகியோரின் மாமியாரும் தாரணி (ஆஸ்திரேலியா), நிரூஷன் (மாணவன், யாழ். பரியோவான் கல்லூரி), காங்கேயன் (ஆஸ்திரேலியா), நிருஜா, நிலாஞ்சலி, சைமி, விவேக்கா (யாழ்ப்பாணம்), தாட்சாயணி, ஹரீசன் (டென்மார்க்), நிதீசன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வன்னியசிங்கம் வீதி, ஆவரங்காலில் உள்ள மகனின் இல்லத்தில் இன்று (12.05.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகள் குடும்ப மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வன்னியசிங்கம் வீதி,*
*ஆவரங்கால்.*

தகவல்:
செ.அருளானந்தம் (மகன்)
(நீர்ப்பாசனத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்)

(3684)

# கண்ணீர் அஞ்சலி

வல்வெட்டித்துறை அம்மன் கோயிலடியைச் சேர்ந்த

## அமரர் வ.இ.நடனசிகாமணி

## (மணியம் ஐயா)

அவர்கள் அகால மரணமடைந்தமையையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நவீன சந்தை,*
*யாழ்ப்பாணம்.*

லிங்கம் சில்க் ஹவுஸ்
ஊழியர்கள்.

(C/22087)

# கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில்
ஈ.சி.ஜி. பதிவாளராகக் கடமையாற்றுபவரும்
எமது நண்பருமாகிய ச.கிருஷ்ணேந்திரனின் அன்புத் தாயார்

## திருமதி பராசக்தி சந்திரன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்,
யாழ். போதனா வைத்தியசாலை.

(3685)

## நவாலியூர் ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய கும்பாபிஷேக
## 15ஆம் நாள் மண்டலாபிஷேக உற்சவ விஞ்ஞாபனம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு

பன்னெடுங்காலமாக நவாலிப் பதியில் அருள்நிறைந்த ஆலயமாக அமைந்த ஸ்ரீ சிந்தாமணி விநாயகப் பெருமான் ஆலயம், வன்செயல்களால் தாக்கப்பட்டு பல வருடங்களாக (16 ஆண்டுகள்) செயலிழந்த நிலையில் ஆலய உபகரணங்கள், திருப்பணிக்கு ஆக்கப்பெற்ற பொருள்கள் மற்றும் மரங்கள், தீராந்திகள், ஆலய தளபாடங்கள் சூறையாடப்பட்டிருந்தது. இத்தகைய செயல்கள் பலருக்கும் வேதனையை ஏற்படுத்துவனவாய் அமைந்துவிட்டன.

எனவே தற்போது உள்ள சூழ்நிலையில் ஆலயத்தை ' க்தர்களின் உதவி நிதியுடன் புனரமைத்து சித்திரை 16ஆம் நாள (29. 2002) அன்று விநாயகப் பெருமான் திருவருள் கொண்டு மகா கும்பாபிஷேகமும், பெருஞ்சாந்தி விழாவும் சிறப்பாக நடந்தேறின. தொடர்ந்து 15 தினங்கள் அபிஷேகம், இரவு உற்சவம் நடைபெற்று சித்திரை 30ஆம் நாள் (13.05.2002) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு விசேட நவோத்தர சதுஸ்சத (400) சங்காபிஷேகமும், பஞ்சமுக விநாயகருக்கு பஞ்சமுகார்ச்சனையும், பகல் அன்னதானமும் நடைபெறும்.

அன்றைய தினம் மாலை 5 மணிக்கு விசேட மேளக்கச்சேரியும் விநாயகப் பெருமானுக்கும் பஞ்சமுக விநாயகப் பெருமானுக்கும் விசேட தீபாராதனை நடைபெற்று பின் அலங்கார சப்பரத்தில் ஆரோகணித்து மங்கள வாத்திய இசையுடன் திருவீதியுலா இடம்பெறும்.

அத்துடன் விசேட இசை நிகழ்ச்சிகள், சமயச் சொற்பொழிவுகள் என்பன இடம்பெறும். பக்த பெருமக்கள் அனைவரும் வருகை தந்து அபிஷேக ஆராதனை, இசை நிகழ்ச்சிகளை இரசித்து விநாயகப் பெருமானின் பரிபூரண அருள்பெறக்கடவர்.

*ஆலய தர்மகர்த்தா:*

**சிவஸ்ரீ ச.சுப்பிரமணியக்குருக்கள் குடும்பம்,**
**சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள்.**

*விழா அமைப்பாளர்:* **பிரம்மஸ்ரீ து.சுப்பிரமணிய சர்மா**
*அட்டகிரி, நவாலி.*

(3676)

## மந்துவில் பகுதியில் உள்ள
# பாடசாலைகளிலிருந்து படையினர் வெளியேறாவிட்டால் ஆர்ப்பாட்டம்
### அப்பிரதேச மக்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,மே12

மந்துவில் பகுதியிலுள்ள சில பாடசாலைகளில் இன்னமும் இராணுவத்தினர் தங்கியுள்ளதால், மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாக அப்பகுதி பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் முறையிட்டுள்ளனர்.

இப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து விட்ட நிலையிலும் சில பாடசாலைகளில் இராணுவத்தினர் தொடர்ந்தும் தங்கியிருப்பதால் அவை இயங்க முடியாதநிலை ஏற்படடுள்ள தாகவும் -

இதனால் மாணவர்கள் கல்வி வசதியின்றி பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக அந்தந்தப் பாடசாலைகளில் தங்கியுள்ள படையணிகளின் உயர் அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு பேசிய போதிலும் எந்தவித பலனும் கிட்டவில்லை எனவும் கூறப்பட்டது.

இராணுவத்தினரை குறிப்பிட்ட பாடசாலைகளில் இருந்து வெளியேற்றி கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள உதவுமாறு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவுக்கும யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் மகஜர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அப்பகுதி மக்கள் அனைவரும் கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள அந்த மகஜரில்-

விரைவில் இராணுவத்தினர் பாடசாலைகளிலிருந்து வெளியேறாவிட்டால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப் போவதாக அப்பகுதி மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-4)

## சைக்கிள் பயணிகள் சிரமம்

தென்மராட்சி பிரதேசத்தில், சங்கத்தானை தொடக்கம் கைதடி வரையில் கண்டி வீதி உட்பட வீதிகளில் அறுந்து தொங்கிக் கொண்டிருக்கும் மினசார கம்பிகளால் சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றில் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

கண்டிவீதியில் தற்போது வாகனப் போக்கு வரத்து அதிகரித்துள்ளதை அடுத்து வீதியோரமாகச் செல்லும் சைக்கிளோட்டிகள் மின்சார கம்பிகளில் கொழுவப்பட்டு நிலத்தில் தூக்கி வீசப்படுகின்றது. (எ-117)

## மஞ்சத் தரிப்பிடம் அமைக்கும் வேலைகள் ஆரம்பம்

சுழிபுரம்,மே12

தொல்புரம், வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் மஞ்சத் தரிப்பிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ரூபா இரண்டு லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேற்படி திருப்பணி வேலைகள் நிறைவு பெற்றதும், மஞ்சம் நிரந்தர தரிப்பிடத்தில் நிறுத்தப்படும்.(எ-28)

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட ஹீரோ ஹொண்டா (Passion) சிகப்பு ரக மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு:-*
**ச.செந்தூரன்,**
இல.04,மேதர் லேன்,
(செல்லமுத்து மைதானத்திற்கு அருகல்)
மானிப்பாய்.
T.P.021 - 3470

(3679)

### கால்நடை தீவனங்கள் மலிவு விலையில்

இம்மாதம் தயாரிக்கப்பட்ட (மே) புதிய பிறிமா, பாமஸ் சொயிஸ் கால் நடை தீவனங்களை திங்கள் முதல் (13.05.2002) கீழ்க்குறிப்பிட்ட விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| ★ முட்டைத் தீன் - | 1,250/- |
| ★ வளரும் தீன் - | 750/- |
| ★ குஞ்சுத் தீன் - | 800/- |
| ★ புறொயிலர் பினிசர் - | 1,800/- |
| ★ புறொயிலர் ஸ்டாட்டர் - | 1,800/- |
| ★ கறவை பசு உணவு - | 950/- |

(மொத்தமாக கொள்வனவு செய்ய விரும்புவோர் முற்கூட்டியே பதிவுசெய்ய வேண்டும்)

தொடர்பு: **சிவா, வாசு பாம்**
(வட்டக்குளம் முன்பாக)
பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய்.

(3671)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## கணபதிப்பிள்ளை தம்பிஐயா
(பிரபல புகையிலைத் தொழிலதிபர்)

*கண்ணையிமை காப்பதெனக் காத்தெம்மை*
*புரத்த கருணையாளா! கவலை யெனுங்*
*கடலி லெம்மைக் கைவிடுதல் நன்றோ ஐயா!*
*மண்மீதில் நீயளித்த மாண்பியால் மனித*
*ரென வாழ்கின்றோ மின்று மாநிலத்தே*
*யுமை யிழந்து பகரானோம் மாற்ற*
*மிலாக் காலதுன் உயிர் கவர விண்போ*
*னாய் என்றெண்ணும் போதெல்லாம்*
*வேகுதே வெந்தழலில் நெஞ்சம்.*

*M.K.T.வன்னியசிங்கம் வீதி,* மனைவி, மக்கள், மருமக்கள்,
*தாவடி வடக்கு, கொக்குவில்.* (3678) பேரப்பிள்ளைகள்.

## ஆண்டுகள் இரண்டு
## கரைந்தனவோ கண்ணீரில்...

கண்மகிழ 10 - 01 - 1975



கண்நெகிழ 12 - 05 - 2000

## செல்வி யசிதா விஜயரத்தினம்


*திதி: 21-05-2002*

துன்பத்தின் துன்பமோ? துயரத்தின் சிகரமோ?
தாங்குமோ நெஞ்சம்! தவிக்குதே இதயம்!
ஆண்டு இரண்டு ஓடியும் ஆறவில்லை எம்துயரம்
இன்முகத்தைக் காணாது எவ்வழியும் தேடுகின்றோம்
புன்சிரிப்பின் புகலிடமே போன இடம் சொல்லாயோ?
ஷெல்பட்டு நீயும் எமை மறந்துதான் போனாயோ?
ஷெல் சத்தம் இன்றில்லை பறந்தோடி வாராயோ?
யசியே பற்றுடன் வந்தொருக்கால் பார்த்து நீ போனாலென்ன?

*கட்டுக்காணி வீதி,*
*சாவகச்சேரி.*
குடும்பத்தினர், சுற்றத்தார்.

(3660)


# Canadian College of Business & Computers




An Opportunity to
**PROSPER**
in Information Technology

*An urban location that's trendy, upscale and very cool. An opportunity to get technically in-tune with some of the hottest state-of-the-art technology in the country. At the Canadian College of Business & Computers, we're offering you the opportunity to own the future in Information Technology. Programs run all year long. Classes in English and language support included.*

Ready for the challenge? Welcome to Canada for your studies.

**Canadian College of Business & Computers**
**130 Bloor St. West, Suite 901, Toronto, Ontario, M5S 1N5**

WWW.CCBC.CA

Contact Persons: **Meena & Violeta**
INTERNATIONAL ADMISSIONS OFFICE
phone: 1•416•413•1234
fax: 1•416•413•0314
e-mail: admin@ccbc.ca

Call During **8:00pm - 5:00am** Sri Lanka Time

(C/21488)

# உதயன்

## டக்ளஸின் ஆற்றாமை

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்துவது தொடர்பான விடயம் குறித்து இரண்டு அரசியல் பிரமுகர்கள் கடந்த ஓரிரு தினங்களிலும் வெளியிட்டுள்ள கருத்துக்கள் நோக்கற்பாலவையாகவுள்ளன.

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்பாடும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் அரசியல் நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளும் புலிகள் தலைமையில் வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளன.

இந்த நம்பிக்கை ஏற்படுத்திய ஆற்றாமை காரணமாக இரண்டு அரசியல் தலைவர்களும் கருத்து வெளியிட்டிருக்கின்றார்கள்.

அவர்களில் ஒருவர் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தனது தலைமையின் கீழ் வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைக்க கனவு கண்டு, அக்கனவு நிறைவேறாத நிலையில் அரசியல் செல்வாக்கை இழந்து நிற்பவர்.

மற்றவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியில் இருந்துகொண்டு தனது அரசியல் விருப்பத்திற்கேற்றவாறு நிறைவேற்று அதிகாரத்தை நிறைவேற்ற முடியாது திண்டாடிக்கொண்டிருப்பவர்.

இவர்கள் இருவரும்தான் உத்தேச இடைக்கால நிர்வாகம் குறித்து கருத்து வெளியிட்டிருக்கின்றார்கள்.

"முந்திய அரசிடம் நான் இடைக்கால நிர்வாக சபை கேட்டது உண்மை. ஆனால், இன்று இடைக்கால நிர்வாகம் தேவையில்லை. அதை புலிகளிடம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் இல்லை. இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்துவதானால் அது சகல தரப்பையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனநாயக அமைப்பாக இருக்கவேண்டும். முற்றும் முழுதாகப் புலிகள் அதில் நிறைந்து இருக்கக் கூடாது" என்று இந்தியாவில் வைத்து திருவாய் மலர்ந்திருக்கின்றார் டக்ளஸ் தேவானந்தா.

இடைக்கால நிர்வாக சபையில் ஜனநாயக வழியில் தெரிவு செய்யப்பட்டோர் இருக்க வேண்டும் என்றும், அது ஜனநாயக அமைப்பாக இருக்கவேண்டும் என்றும் கூறுவது வரவேற்கத்தக்கதுதான். ஆனால், அதை டக்ளஸ் தேவானந்தா கூறுவதுதான் வேடிக்கையாகவுள்ளது.

1994இலும், 2000இலும் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் டக்ளஸ் தேவானந்தா அணியினர் எப்படி நடந்துகொண்டார்கள், எத்தகைய ஜனநாயக வழியில் அவர்கள் நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றினார்கள் என்பதையெல்லாம் அறிந்துகொண்டவர்களுக்கு அவர் இப்போது ஜனநாயகம் குறித்துப் பேசுவது நிச்சயம் வேடிக்கையாகத்தான்படும்.

குறுக்கு வழியில் குடாநாட்டில் ஒன்பது ஆசனங்களையும் அடுத்த தேர்தலில் நான்கு ஆசனங்களையும் பிடுங்கிக் கொண்டபோது, அந்த ஆசனங்களை வைத்துக்கொண்டு சிங்களப் பேரினவாத ஆட்சியில் பங்குகொண்டபோது, அவற்றை வைத்துக்கொண்டு இடைக்கால நிர்வாகத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம் என்று நம்பிக்கை நிலவியபோது - 'இடைக்கால நிர்வாகம் அவசரம் தேவை, அவசியம் தேவை' என்று குரல் எழுப்பியவர் டக்ளஸ் தேவானந்தா.

இப்போது அது தனது கட்டுப்பாட்டில்வர வாய்ப்பேயில்லை என்றவுடன் 'எட்டாப்பழம் புளிக்கும்' என்ற பாணியில் இடைக்கால நிர்வாகம் குறித்து கதை விடுக்கிறார் அவர்.

'தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே' என்ற கோரிக்கை கடந்த பொதுத் தேர்தலில் ஈழத் தமிழ் மக்களில் பெரும்பான்மையினரதும், அதுவும் அரச இராணுவ கட்டுப்பாட்டில் வாழும் தமிழ் மக்களில் பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் ஒப்படைப்பது நீதியா? ஜனநாயக முறைப்படியானதா? - என்ற கேள்விகளை இந்தக் கட்டத்தில் டக்ளஸும் அவரது அணித் தலைவியான ஜனாதிபதி குமாரதுங்காவும் கேட்பது நியாயமற்றது; பொருத்தமற்றது.

'அரசும் புலிகளும் பேச்சு நடத்தத் தயாராக இருக்கின்றார்கள். இந்த நிலையில் இடைக்கால நிர்வாகம் ஏன்? பிரச்சினை பற்றிப் பேசி வடக்கு - கிழக்கில் தேர்தலும் நடத்தி விடலாம்!' - என்றும் டக்ளஸ் கூறியிருக்கின்றார்.

அதேபோன்ற கருத்தை ஜனாதிபதி குமாரதுங்காவும் முன்வைத்துள்ளார்.

"பிரச்சினைக்குரிய முக்கிய விடயங்களை புலிகள் பேசுகின்றார்கள் இல்லை. இடைக்கால நிர்வாகம் குறித்தே பேசுகின்றார்கள். தனிநாட்டுக்கு மாற்று என்ன என்பது குறித்து அவர்கள் பேச முன்வரவேண்டும். அதை விடுத்து தங்கள் மீதான தடை நீக்கம், இடைக்கால நிர்வாகம் போன்ற ஓரத் தன்மையான - மேலோட்டமான - பிறகாரியங்களிலேயே அவர்கள் முக்கிய கவனம் செலுத்துகிறார்கள். கடந்த 18 வருடங்களில் நடந்து கொண்டது போல வேறு விடயங்களில் அவர்கள் தொங்கிக் கொண்டிருக்கக் கூடாது - இப்படி ஜனாதிபதி கூறுகின்றார்.

ஜனாதிபதி சந்திரிகாவும் டக்ளஸும் இப்போது கூறும் இந்த விடயங்கள் குறித்து, பேச்சுக்கான இணக்கத்திற்கு தாம் வர முன்னரே தமது நிலைப்பாட்டை புலிகள் தெளிவுபடுத்தியிருந்தனர்.

கடந்த நான்கு, ஐந்து வருடங்களாக புலிகளின் அடிப்படைக் கொள்கை நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் மாவீரர்தின உரைகளில் தலைவர் பிரபாகரன் அதை வெளிப்படுத்தியிருந்தார். அது ஜனாதிபதி குமாரதுங்கவிற்கும் டக்ளஸுக்கும் புரியாமல் போனது அல்லது அவர்கள் மறந்து போனது விசனத்துக்குரியது.

"முதலில் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். தமிழ் மக்களின் வாழ்வு இயல்பு நிலைக்குத் திரும்ப வேண்டும். புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கப்பட வேண்டும். இவ்வளவும் நிறைவேற்றப்பட்டு நல்லெண்ணப் புறச் சூழ்நிலை ஒன்று ஏற்படுத்தப்படுமானால் அந்தப் பின்னணியில் அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களில் ஈடுபட நாம் தயார்" - என்று தலைவர் பிரபா மீண்டும் மீண்டும் அறிவித்து வந்தார். அது சந்திரிகா - டக்ளஸ் கூட்டுக்கு புரியவில்லை. பிரதமர் ரணிலுக்குப் புரிந்தது; ஏற்றுக்கொண்டார்; பேச்சுக்கான ஏற்பாடுகளில் இறங்கினார். அந்த முன்னேற்பாட்டு வரிசையே யுத்த நிறுத்தம், பொருளாதாரத் தடை நீக்கம், தேவையற்ற கட்டுப்பாடுகள் விலக்கல், புலிகள் மீதான தடையை அகற்றல், இடைக்கால நிர்வாகம் என்பன.

அதைக் குறைகூறுவது இப்போது பொருத்தமற்றது. சமாதான முயற்சிகளைக் குழப்ப எடுக்கும் நடவடிக்கையின் மற்றொரு வடிவமே இது.

# ஈழத் தமிழரின் அவலத்தை நேரில் வந்து பாருங்கள்

## ஜெயலலிதாவுக்கு மகேஸ்வரன் அழைப்பு

கொழும்பு,மே12

இலங்கையில் தமிழ் மக்கள் படும் இன்னல்கள், அவலங்களை நேரில் வந்து பாருங்கள்!

- இப்படி தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு அழைப்பு விடுத்துள்ளார் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஊடாக ஜெயலலிதாவுக்கு இந்த அழைப்பை அமைச்சர் விடுத்துள்ளார்.

இலங்கை அரசு சார்பிலும் தமிழ் மக்கள் சார்பிலும் இந்த அழைப்பை விடுப்பதாக அமைச்சர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தினால் வாடி அழித்து சிதைந்துபோயுள்ள தமிழ் மக்களை நேரில் வந்துபாருங்கள். அவர்களை நேரில் பார்த்தால்தான் அவர்களுக்காக தமிழகம் என்ன செய்ய வேண்டும் என்பதை தங்களால் உணர முடியும்.

அவர்களை நேரில் பார்க்காமல் தமிழ் மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிராகக் குரல் கொடுத்துக்கொண்டிருக்கும் நீங்கள், மக்களுடன் நேரில் கலந்து உறவாடி அவர்களின் மன உணர்வுகளை அறிந்து கொண்டால் தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்வீர்கள் என நம்புகிறேன் - என்று அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ம-3)

## நாட்டு நடப்பு

### விண்ணுலகடையலாமோ?

காலையும் மாலை தோறும்
கடுமையாய் தீர்த்த மாடி
சீலமார் சைவ உணவு உண்டு
சிவனார் கோயில் நோக்கில்
ஆலவாய் அமரன் பாதம்
அடைவது உறுதி என்றால்
காலை மதியம் மாலை
தெற்ப குளத்தினில் நீராடிவிட்டு
நாலைந்து மணிவரைக்கும்
நாயகன் கோவில் நோக்கும்
வேலையற்ற நேரையும் தவளை தானும்
விண்ணுலகு அடையுமன்றோ?

- விகடகவி -

# இடைக்கால நிர்வாகம் தேவையில்லை; அதை புலிகளிடம் தர அவசியமும் இல்லை

## இப்படிக் கூறுகிறார் டக்ளஸ் தேவானந்தா

சென்னை,மே12

"முந்திய அரசிடம் நான் இடைக்கால சபை கேட்டது உண்மை. ஆனால், இன்று இடைக்கால நிர்வாகம் தேவையில்லை. அதைப் புலிகளிடம் ஒப்படைக்கவேண்டிய அவசியம் இல்லை" என்றார் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா.

டக்ளஸ் தேவானந்தா வைத்திய ஆலோசனைகளைப் பெறுவதற்காக சென்னை வந்துள்ளார்.

வடக்கும் கிழக்கும் தனது பூரண கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று விரும்பும் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை ஒப்படைத்தால் சமாதானப் பேச்சுவார்த்தையின் நோக்கமே அடிபட்டுப் போய்விடும் என்றார் டக்ளஸ் தேவானந்தா.

இப்போது நிரந்தர யுத்தநிறுத்தம் நடைமுறையில் இருக்கிறது. அரசும் புலிகளும் பேச்சு நடத்தத் தயாராக இருக்கிறார்கள். இந்த நிலையில் இடைக்கால நிர்வாகம் ஏன்? பிரச்சினை பற்றிப் பேசி அரசியல் தீர்வு கண்டு வடக்கு - கிழக்கில் தேர்தலும் நடத்தி விடலாமே என்றார் டக்ளஸ் தேவானந்தா.

'இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்துவதானால் அது எல்லா சமூகத்தினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனநாயக அமைப்பாக இருக்கவேண்டும். முற்றுமுழுதாகப் புலிகள் அதில் நிறைந்திருக்கக்கூடாது. இதை நான் இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கும் நோர்வே அனுசரணைக் குழுவினருக்கும் தெரிவித்திருக்கின்றேன்' - என்றும் டக்ளஸ் தேவானந்தா சொன்னார். (ஓ)

### யுத்தநிறுத்தக் கண்காணிப்பு குறித்து

# நாடாளுமன்ற குழு உருவாகாததுக்கு எதிர்க்கட்சிகள்தான் காரணம்

## அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு,மே12

எதிர்க்கட்சியினரிடையே பொது இணக்கப்பாடு ஒன்று ஏற்படாத காரணத்தினாலேயே யுத்தநிறுத்தத்தைக் கண்காணிக்கும் நாடாளுமன்றக் குழுவை அமைக்கமுடியவில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

நாடாளுமன்றக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒருமைப்பாட்டுடன் எதிர்க்கட்சிகள் நடந்துகொண்டிருந்தால் யுத்தநிறுத்தம், சமாதானப் பேச்சு ஆகியவை குறித்து ஆராயவென நாடாளுமன்றக் குழுவினை ஏற்படுத்தியிருக்கமுடியும்.

ஆனால், அவ்வாறான ஒற்றுமை ஏற்படாத காரணத்தினாலேயே நாடாளுமன்றக் குழு நியமிக்கப்படவில்லை. இன்னமும் இவ்விடயத்தில் இழுபறி நிலையும் காணப்படுகின்றது.

- என்று அவர் கூறினார். (ஒ-12)

# குடிதண்ணீர் குழாய்களை சேதமாக்கும் விஷமிகள்

## அதனால் விநியோகம் பாதிப்பு

யாழ்ப்பாணம்,மே12

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் பொருத்தப்பட்டுள்ள குடிதண்ணீர் குழாய்கள் விஷமிகளால் சேதப்படுத்தப்படுவதாக முறைப்பாடுகள் எழுந்துள்ளன. குடிதண்ணீர் குழாய்கள் உடைக்கப்படுவதால் நாளாந்தம் பெருமளவில் குடிதண்ணீர் வீண் விரயமாவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் தமக்கு ஒழுங்காக குடிதண்ணீர் கிடைப்பதில்லையென நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் நாளாந்தம் குறை கூறிவருகின்றார்கள் எனவும் -

குடிதண்ணீர் விநியோகம் சீராக இல்லாததற்கு இந்த விஷமிகளின் செயலே காரணம் எனவும் - தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். அலுவலக அதிகாரி ஒருவர் கூறினார்.

இதேவேளை -

யாழ்.குடாநாட்டில் மழை நீர் சேகரிக்கும் திட்டம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் -

இதன் முதற்கட்டமாக தீவுப பகுதியில் இதற்கான வேலைத திட்டங்கள் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் -

அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஒ-

### நாளை

சித்திரை 30
திங்கட்கிழமை
(13.05.2002)
திதி : பிரதமை
மாலை 5.38 வரை.
நட்சத்திரம்: கார்த்திகை
பிற்பகல் 4.19 வரை.
சுபநேரம் : 11.54 - 1.24
ராகுகாலம்: 7.24 - 8.54
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒருவரிடம் காட்டும் அன்பு, அவர்கள் குறையை மறைக்கும் போர்வையாகி விடக்கூடாது.

# ஈழத்தவர்களின் கலை ஆக்கங்களை நூல் வடிவில் வெளியிடத் திட்டம்

யாழ்ப்பாணம்,மே12

ஈழத்தவர்களின் கலை ஆக்கங்களைத் தொகுத்து, அவற்றை நூல் வடிவில் வெளியிடுவதற்கு பண்டத்தரிப்பைச் சேர்ந்த நபரொருவர் முன்வந்துள்ளார்.

எனவே மேற்படி நூலில் இடம்பெறும் வகையில் கலைகளுடன் தொடர்புடைய நூல்கள், கட்டுரைகள், அரங்கேற்ற மலர்கள், சிறப்பு மலர்கள் என்பவற்றின் ஆசிரியர், விடயம், வெளியிடப்பட்ட காலம் போன்றன குறித்த விவரங்கள் தேவைப்படுகின்றன என்றும் -

சம்பந்தப்பட்டவர்கள் எஸ்.சிவானந்தராஜா, செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பு என்ற முகவரியுடன் நேரிலோ அல்லது தபால் மூலமோ தொடர்புகொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இடைக்கால நிர்வாக யோசனையை பொ.ஐ.மு.தான் முதலில் முன்வைத்தது

## எஸ்.பி.திஸநாயக்கா தெரிவிப்பு

கொழும்பு,மே12

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியே தற்காலிக இடைக்கால நிர்வாகம் வடக்கு - கிழக்கில் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற கொள்கையை முன்வைத்தது - இவ்வாறு அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா கூறினார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை மீது நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விசேட விவாதத்தில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படுவதை இப்பொழுது ஏன் எதிர்கிறார் என்பது தனக்கும் புரியவே இல்லை என்றும் தெரிவித்தார். சமாதான முன்னெடுப்பின் காரணமாக பொ.ஐ.முவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒரேநோக்கில் செயலாற்றுவதாகவும் -

ஆனால், சமாதான முயற்சிகளுக்கு ஜே.வி.பியினரது ஆதரவை பொ. ஐ.முவைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் மூலம் பெற அரசு முயற்சிப்பதாகவும் -

எஸ்.பி. திஸநாயக்கா மேலும் கூறினார்.

# ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் சிங்கள அதிபர் நியமனம் ரத்து

கொட்டகலை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரிக்கு இம்மாதம் 15ஆம் திகதி முதல் பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் அதிபராக நியமிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. அந்நியமனம் உடனடியாக ரத்துச்செய்யப்பட்டுவிட்டது.

இந்நியமனத்தைக் கண்டித்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கேட்டுக்கொண்டதற்கிணங்க பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் கல்வியமைச்சரைச் சந்தித்தார். நியமனத்தை ரத்துச் செய்யக் கோரினார். நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இச்சந்திப்பை அடுத்து கல்வியமைச்சரால் நியமனம் ரத்துச்செய்யப்பட்டது. இப்பேச்சில் அமைச்சர் பெ.சந்திரசேகரனும் கலந்துகொண்டார்.

இந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து தமிழர்களே அதிபர்களாக நியமிக்கப்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# கடவுளின் வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்வோம்

**ஞாயிறு நற்பிரசாதம்**

மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயில் இருந்து புறப்படுகின்ற வார்த்தையினாலும் பிழைப்பான். இப்படியாகப் பரிசுத்த திருமறையில் இயேசுபெருமான் இயம்புவதைக் காணலாம். அவர்தம் திருவாயில் இருந்து புறப்பட்ட ஒவ்வொரு வார்த்தைகளினாலும் மனுக்குலம் தழைத்தது. உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார். திமிர் வாத நோயாளி குணம்பெற்றான். கொடிய மனிதனான சகேயூ புது வாழ்வைப் பெற்றான். மரித்துப் போன லாசருவை நோக்கி, லாசருவே வெளியே வா என்றார். அவன் உயிர் பெற்று வெளியே வந்தான். அவனைச் சுற்றியுள்ள கட்டுக்கள் யாவும் அகன்றன. அவருடைய வார்த்தைகளில் தான் எத்தனை அற்புதம்.

இன்றைய உலகில் கடவுளிடமும் அவருடைய வார்த்தைகளிலும், நம்பிக்கை இல்லாத மனிதன். உணவினால் மாத்திரம் உயிர்வாழ முடியுமென்றெண்ணி, மரித்துப்போன மனிதனைபோல் கட்டுண்டு செயற்பட முடியாதபடி இருக்கின்றான். இப்படியாகச் சாவின் விழிம்பில் நிற்கும் மனிதனை நோக்கி, கடவுள் அழைக்கின்றார். மகளே, மகனே வெளியே வா. நீ கடவுளின் படைப்பு. யாருக்கு அஞ்சிப் பயப்படுகின்றாய், ஏன்? அஞ்சி வேதனைப்படுகின்றாய் நீ போகுமிடம் எங்கும் நான் உன்னோடு கூட இருக்கின்றேன். கலங்காதே, திகையாதே நான் உன் கடவுள். உன்னை ஆண்டு நடத்திடும் தெய்வம் நான். என் வார்த்தைகளை இவ்வுலகுக்குக கூறுவதற்கு ஏன் நடுங்குகிறாய்? உன வாயில் இருந்து கடவுளின் வார்த்தைகள் வெளிவரட்டும். மரண இருளில் இருக்கும் மக்களை மீட்டெடுக்க வெளியே வா. உன் கட்டுக்கள் யாவற்றையும் உடைத்துவிடு நீங்கள பூமிக்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்புகாரமற்றுப போனால் எதற்குதவும்? மனிதரால் மிதிககப்படுவதற்கே ஒளிய வேறெதற்குதவும்.

மனிதரைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். தீமை செய்து பாடு அனுபவிப்பதிலும் நன்மை செய்து பாடு அனுபவிப்பது சந்தோஷமே. ஆத்துமாவை கொல்ல வல்லவர்களாய் இராமல் சரீரத்தை மட்டும் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம். ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்திலே தள்ள வல்லவருக்கே நீங்கள் பயப்படுங்கள். எனவே அஞ்சாது கடவுளின் வார்த்தைகளைப் பகர்ந்து கொள்வோம் ஆகாரத்தால் மட்டுமன்றி கடவுளின் வல்லமையுள்ள வார்த்தைகளினாலும் உலகம் உய்யும் என்பதை உணர்த்துவோம். ஆமென்.

**சகோ.த.திருவம்பலம்**

# சட்டவிரோதமாக இத்தாலி சென்ற 104 இலங்கையர்கள் கைது!

சட்டவிரோதமாக இத்தாலி சென்ற 104 இலங்கையர்கள் இத்தாலியப் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் சென்ற மீன்பிடி இழுவைப் படகும் கைப்பற்றப்பட்டுள்ளது.

நீர்கொழும்புக் கடலில் இருந்து புறப்பட்ட இவர்கள் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பே இத்தாலிக்குள் பிரவேசித்துள்ளனரென்று தெரிவிக்கப்பட்டது. கைதான இலங்கையர்கள் நீர்கொழும்பு, சிலாபம், வென்னப்புவ, குளியாப்பிட்டிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். (ம)

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் தம்பிராஜா செல்லையா

(இளைப்பாறிய பொறியியலாளர், அகில இலங்கை சமாதான நீதிவான்)

திதி: 12.05.2002

**உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:**

**அன்பு மனைவி, இளையக்கா, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்.**

*தகவல்:* மனைவி.

*134/2, S.De.S.Jayasinghe Mawatha,*
*Nugegoda. T.P: 01 810519.*

(C/22082)

*"Ranjan Cottage"*
*Sannathy Road. Atchuvely.*

# பதவி வெற்றிடம்

## சந்தைப்படுத்தும் நிறைவேற்று அதிகாரி

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, பொலநறுவை மற்றும் மன்னார் பிரதேசங்களில் கடமையாற்ற சந்தைப்படுத்தும் நிறைவேற்று அதிகாரிகளுக்கான பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் 22-28 வயதுக்கு உட்பட்ட, சந்தைப்படுத்தும் துறையில் இரண்டு வருட அனுபவம் உள்ளவர்கள், ஆங்கிலமும் தமிழும் நன்றாகப் பேசும் திறன் உள்ளவர்கள் 15ஆம் திகதி வைகாசி மாதம், 99, மானிப்பாய் வீதியில் உள்ள பியஸ் ரேடர்ஸ் காரியாலயத்திற்கு தங்கள் விண்ணப்பங்களுடன் நேரடியாக காலை 9 மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சந்தைப்படுத்தும் துறையில் Diploma உள்ளவர்களுக்கும், வாகனம் செலுத்த அத்தாட்சிப் பத்திரம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

**பியஸ் ரேடர்ஸ்**
**ஏக விநியோகஸ்தர்கள்**
**லயன் புறுவரி சிலோன் லிமிடட்,**
*99, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(சி-22070)

# 41ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
27
-
10
-
1943



மறைவு
02
-
04
-
2002

## அமரர் காசிப்பிள்ளை சடாச்சரம்

எங்கள் அன்பு அப்பாவே!
அன்பால் எம்மை வளர்தெடுத்த அப்பாவே
நீ பெற்ற செல்வங்கள்
கூடு கலைந்த குருவி போல் - வாழ்க்கையில்
அச்சுமை தாங்காது - நீங்கள்
தவிக்கையிலே நாயுருவில் வந்த
காலன் உம்மை கொண்டு சென்றானோ?
நாட்பத்தொரு நாள்கலென்ன
நாற்பத்தோராயிரம் நாள்களானாலும்
உம் நினைவு எம்மை விட்டு நீங்காது அப்பா!
உம் பேரக்குழந்தைகள் அப்பப்பா
எங்கேயென்று கதறுகிறார்கள்
அவர்களுக்கேனும் உன்னன்பு காட்ட
வாரீரோ அப்பா!

02-04-2002 அன்று காலமான எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு இறுதிக் கிரியைகளில் பங்குகொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி தெரிவித்தோருக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் இன்று (12.05.02) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
*மகன்* - இராசன் (சுவிஸ்)

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*சொந்த முகவரி:*
*ஈஸ்வரி வீதி, மயிலிட்டி.* (3651)

*தற்காலிக முகவரி:*
*இன்பருட்டி, பருத்தித்துறை.*

## வன்னி நோயாளிகள் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்

வன்னிப் பகுதியைச் சேர்ந்த இரு நோயாளிகள் நேற்றுமுன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யோகபுரம் மல்லாவியைச் சேர்ந்த கனகராஜா ராஜபூபதி(வயது 53) மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த கந்தன் தட்சணசிங்கம்(வயது 43) ஆகியோரே கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து யாழ்.போதனா வைத்தியாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (ஒ-12)

## தூக்கில் தொங்கிய நிலையில் பெண்ணின் சடலம்

யாழ்ப்பாணம்,மே12

வீட்டினுள் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்த பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மருதனார்மடம் சந்தையில் கீரை வியாபாரம் செய்துவருபவரான, உடுவில் நாகம்மாள் கோயிலடியைச் சேர்ந்த கந்தசாமி கனகமலர்(வயது44) என்பவரின் சடலமே மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஒ-12)

## கவிதை நூல் அறிமுகமும் நினைவு தினமும்

யாழ்ப்பாணம்,மே12

மூதறிர் கவிஞர் அரியாலையூர் வே.ஐயாத்துரையின் கவிதைநூல் அறிமுகமும் 6ஆவது ஆண்டு நினைவு தினமும் இன்று ஞாயிறு காலை 9.30 மணிக்கு வல்வை சிவகுரு வித்தியாலய அதிபா த.தவேந்திரராஜா தலைமையில் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வின் நினைவுப் பேருரையை க.நடேசனும் (தெணியான்), கவிதைநூல் அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் த. கலாமணியும், மதிப்புரையை கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர் மு.இராஜநாயகமும் நிகழ்த்தவுள்ளனர். (க-10)

## குருநகர் சென்.ஜேம்ஸில் 'அறிவகம்' நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே12

குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த மாணவர்களுக்கு அடிப்படைக் கல்வி மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றைப் போதிக்கும் நோக்குடன் 'அறிவகம்' எனும் அமைப்பு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தரம் 4 தொடக்கம் தரம் 9வரையான வகுப்புக்களில் கல்வி பயின்று வரும் மாணவர்களுக்கே இவை போதிக்கப்படுகின்றன.

நேற்று மாலை 4.30 மணிக்கு குருநகர் பங்குத் தந்தை வண.பிதா அ.பி. ஜெயசேகரம் அடிகளாரால் குருநகர் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் இந்த அமைப்பு ஆரம்பித்துவைக்கப்பட்டது.

குருநகரைச் சேர்ந்த ம.டொனால்ட் றிகட்சன், சேவியர் சுவைனஸ் ஆகியோரின் முயற்சியால் உருவாக்கப்பட்டுள்ள அமைப்பின் மேற்படி வகுப்புக்களில் கலந்துகொள்ளும் மாணவர்கள் ஏற்கனவே மூன்று வலயங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான வகுப்புக்கள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்ந்து ஆறு மாதங்கள்வரை நடைபெறவுள்ளன. (க-10-51)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

பிறப்பு
14
-
03
-
1942



இறப்பு
23
-
05
-
2001

## திருமதி பரஞ்சோதி மகேஸ்வரி

**அவர்களின் முதலாம் ஆண்டு திதி இன்று (12.05.2002) ஞாயிற்றுக் கிழமை பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற உள்ளது. அவ்வமயம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

(3639)

சோதி ஸ்ரோர்ஸ்
குடும்பத்தினர்.

# 6ஆம் மாத நினைவஞ்சலி



## திருமதி கனகசபை நேசமலர்

மண்ணுலகில்: 21-10-1942 ஈசன் அடியில்: 06.11.2001

**மாதங்கள் ஆறானாலும் - உங்கள்**
**ஆறுதல் எமக்கிங்கில்லை**
**நீங்கவில்லை - உங்கள் நினைவுகள்.**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*இல.11,கஸ்தூரியார் லேன்,*
*யாழ்ப்பாணம்.*

(3657)

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

# தாயாகி நிற்கும் தாதியப் பணி! தரணியில் அதன் மகிமை உயர்க!!

**'தேசிய தாதியர் தினம்' இன்றாகும். அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

நீர்க்குமிழ் போன்ற நிலையற்ற வாழ்க்கையில் துன்பங்கள்தான் எத்தனை? இனமென்றும், மதமென்றும், மொழியென்றும் எத்தனை பிரச்சினைகளும் பிரிவுகளும். அவை ஒருபுறம் போக, வேண்டாத விருந்தாளியாய் மேனியைத் தழுவி வாட்டும் நோய்கள் மறுபுறம்.

நோய்களைக் களையவென வைத்திய நிலையங்களும் வைத்தியர்களும் இருக்கையிலும், அங்கு உயிராயுதமாக நின்று செயற்படுவோர் தாதியரே!

ஒரு நோயாளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும்போது நோய் தொடர்பாகவும் மற்றும் உறவுகளிலிருந்து விலகுவது தொடர்பாகவும் என்று அவன் அவள் மனதில் ஏராளம் அச்சங்கள். வைத்தியசாலை நடைமுறைகள், அமைவிடங்கள் பற்றி தெரியாமல் அல்லாடும் நிலை.

**யாழிவன்**

ஒரு வைத்தியசாலையில் கடமை புரிவோரில் நோயாளியுடன் கூட இருந்து எந்நேரமும் கவனித்துக் கொள்ளுவோர் தாதியரே! நோயாளர் பயம் தீர்த்து, அவர்கள் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அன்பாலும், அரிய கவனிப்பாலுமே நோயைத் தீர்க்க வல்லவர்கள் தாதியர்கள்! 'புளோரன்ஸ் நைற்றிங்கேள்' அம்மையாரின் சத்திய வாக்குறுதியை' ஒப்பித்து அதன் வழிநடக்கும் தாதியர்கள் கண் துஞ்சார், பசி நோக்கார், கருமமே கண்ணாய் இருப்பர்.

தூய்மையான உள்ளம் போலவே வெண்ணிற ஆடை அணிந்து அன்பும் கனிவும் கண்களில் மிதக்க :

இனிய சொற்களை கோவையாக்கி நோயாளரோடு பேசும் தாதியர்களிடம் உள்ள பொறுமையும், பண்பும், கவனிப்பும் அளவிடற்கரியது.

ஆனால் இன்றைய சூழ்நிலையில் இப்பணிக்கு மாசுகற்பிக்கும் வகையில் சில தாதியர் நடந்து கொள்ள முனைவதும் வேதனைக்குரியது.

குறிப்பாக யாழ்.மாவட்ட மக்கள் அனைவருக்கும் வரப்பிரசாதமாக விளங்கும் யாழ்.போதனா வைத்திய சாலையில் சில தாதியர்கள் நடந்து

## கண் துஞ்சாது பசி நோக்காது கருமமே கண்ணாயிருக்கும் தாதியர்

கொள்ளும்விதம் குறித்து பலதரப்பினராலும், பல சந்தர்ப்பங்களிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக ஒரு சிறிய சம்பவம் ஒன்றைக் குறிப்பிடலாம்.

தாயொருவர் தாதி ஒருத்தியிடம் சென்று 'மிஸ், மகள் சாப்பிட்டு விட்டா, இன்சுலின் போட்டு விடுறீங்களோ' என்றார். தாதியோ 'Nurses Duty Roster' எனப் பெரிதாக எழுதப்பட்ட பைலை மும்முரமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். "எங்கட வேலை எங்களுக்குத் தெரியும் நீர் போய் உம்மிட மோளோட நில்லும். வந்துட்டா இஞ்சை....' என்று சொல்லிவிட்டு மீண்டும் பைலுக்குள் தலையை நுழைத்துக்கொண்டார் தாதி.

அரைமணிநேரம் கடந்திருக்கும் மீண்டும் அந்தத் தாயின் விண்ணப்பம் 'அப்ப நீ வந்து இதில இரனெணை' இம்முறை தாதியின் சொற்கள் மேலும் கீழிறக்கம். அந்தத் தாய் கைகளைப் பிசைந்து கொண்டு அப்பால் சென்றார்.

திரும்பவும் அந்தத் தாய் கலங்கிய கண்களுடன் தாதியின் அருகில் போய் நின்றாள். நிமிர்ந்து பார்த்த தாதி, பைலை மூடி தூக்கிப் போட்டார். கதிரையைத் தள்ளிவிட்டு, எழுந்து ஓர் ஊசியோடு போனார் வார்த்தை இல்லை. வசனமில்லை. ஒரே ஏத்து. ஆ...ஆ...அ...

இப்படி எத்தனை சம்பவங்கள். ஒரு சிலர் செய்யும் தவறுகள் தாதிய சமூகத்தையே தவறான கண்ணோட்டத்துக்கு இட்டுச் செல்கின்றன. 'இந்த மிஸி சரியான சுடு தண்ணி', 'அது ஒரு கடுவன் பூனை', 'அந்த மிஸ் ஒரு முசுடு' என்றெல்லாம் தாதியர் மேல் எத்தனை புனைப் பெயர்கள் சூட்டப்படுகின்றன.

அதேவேளை, 'அந்த மிஸ் தங்கமானவா, நல்லா கதைப்பா, அவா பக்கத்தில வந்தாலே நோய் பறந்திடும்', 'அந்த நேர்ஸ் ஊசி போட்டா நோகாது' என்றும் பலர் அளவளாவுவது உண்டு. இந்த நிலை மேலும் விருத்தியடைய வேண்டும்.

'தாதியர்' என்போர் எவ்வளவோ ஒறுத்தல்களை மற்றவர் பொருட்டு செய்பவர்கள். தமது வீட்டுப் பிரச்சினைகள் மற்றும் அலுவலக தொந்தரவுகளுக்கு அப்பால் நோயாளர்களைப் பரிவுடன் கவனிக்க வேண்டிய பாரிய பொறுப்பும் தாதியர்கள் உடையதே. எதிர்வரும் காலங்களிலாவது அவர்கள் தாதியப் பணியின் மகத்துவம் உணர்ந்து அதன் 'மகிமை' உயர சேவை புரிவார்களாக.

தாதியர் சேவையின் தாயார் எனக் குறிக்கப்படும் புளோரன்ஸ் நைற்றிங்கேளின் வழியைப் பின்பற்றி சேவை செய்யும் தாதியர் பரம்பரை உருப்பெற வேண்டும்.☆

# அறநெறி வாழ்வுக்கு வழிகாட்டும் இலகு தமிழ்நூல் 'அறநெறிச் சிந்தனைகள்'

'அறம் செய்ய விரும்பு' என்பது ஒளவையார் வாக்கு. அறம் செய்ய வேண்டும் என்ற விருப்பமே மக்களின் வாழ்க்கையில் உயர்வை ஊட்ட வல்லது.



| | |
|---|---|
| நூல்:- | 'அறநெறிச் சிந்தனைகள்' |
| ஆசிரியர்:- | சமூகஜோதி கா.கணேசதாசன் |
| விலை:- | 30 ரூபா |
| வெளியீடு:- | மானிப்பாய் ஸ்ரீ மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையினர். |

இன்றைய சிறார்களே நாளைய மனிதர்கள். ஆரம்பத்தில் சிறுவர்களுக்கு ஊட்டப்படும் அறநெறிகள் பசுமரத்து ஆணிபோல மனதில் பதிந்து என்றும் நிலைக்கும்.

'அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்', 'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' என்பன போன்ற எத்தனையோ அறநெறிச் சிந்தனைகள் எமது வாழ்க்கைக்கு உரமூட்டி நிற்கின்றன. இத்தகைய அறநெறிச் சிந்தனைகளைக் கொண்டுள்ள பல நீதி நூல்களும் நம்மிடையே உள்ளன. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி என அவை நீண்டு செல்லும்.

இளம் சமுதாயத்திடையே நாகரிக எழுச்சியின் விளைவாக தற்காலிகமாகப் பரவி நிற்கும் சமய விரோதப்போக்கு, ஒழுக்கக் கேடுகள் நீக்கப்படவேண்டும். இளைஞரிடையே மனமாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய நற்சிந்தனைகள் ஊட்டப்படவேண்டும். இதற்கான கட்டாய தேவை இன்றுள்ள கற்றோரிடமும் சமயத் தலைவர்களிடமும் ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில் கற்றறிந்த சமயப் பெரியார் 'சமூக ஜோதி' கணேசதாசன் ஆக்கியுள்ள 'அறநெறிச் சிந்தனைகள்' என்ற நூல் இன்றைய கட்டாய தேவைக்கு வலுச் சேர்த்துள்ளது. அறநெறிச் சிந்தனைகளை குழந்தைகளிடம் வளர்ப்பதற்கு தன்னை அர்ப்பணித்துப் பணிபுரிந்து வருபவர் கணேசதாசன்.

மக்கள் பணி, மகேஸ்வரபூசைப் பணி, கல்விப் பணி, தெய்வப் பணி எனப் பல நற்கருமங்களை ஆற்றி வரும் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையினர், ஆலய அறநெறிப் பாடசாலையின் அதிபரான கணேசதாசனின் இந்நூலை அச்சேற்றி வெளியிட்டுள்ளனர். யாழ்.மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் நூலை வெளியிட்டு வைத்தார்.

பிள்ளையார் சுழி முதல் பொறுமையின் இலக்கணம் வரை பத்து சிந்தனை சுடர்கள் இவரது ஆக்கங்களாகப் பிரகாசிக்கின்றன. அந்தப் பிரகாச ஒளியிலே அறம், அன்பு, ஒழுக்கம், கோபம் கொள்ளாமை, இன்சொல் பேசல், நன்றி மறவாமை, நல்லோர் நட்பு, பொறுமை போன்ற பண்புகள் பிரகாசிக்கின்றன.

எக்கருமத்தைத் தொடங்கும் போதும் விநாயகரை வழிபடுவது சைவ சமயப் பண்பு. விக்கினங்களை விலக்கும் விநாயகரது குறியீடான பிள்ளையார் சுழியை ஏன் போட வேண்டும் என்பதற்கு விளக்கம் கூறி அறநெறிச் சிந்தனைகளை ஆரம்பிக்கின்றார் சமூகஜோதி.

சிறுவர் மத்தியில் கல்வியுடன் இறை வழிபாடும் வளர்க்கப்பட வேண்டும். இறைபக்தியுடன் கூடிய சமய வாழ்வின் மூலமே அமைதி, சாந்தி, சமாதான வாழ்வு கிடைக்கும் என்பதை 'இறைவழிபாடு' என்ற பொருளில் விளக்கி, காலை எழுந்தவுடனும், இரவு படுக்கைக்குப் போகும் போதும் இறைவனுக்கு நன்றி கூறும் நற்பண்பையும் இவர் விளக்கி யுள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு நல்ல சிந்தனைகளையும், அறிவையும் தரக்கூடிய வகையில் அற நெறி, அன்பு நெறி, ஒழுக்க நெறிச் சிந்தனைகளையும் இவர் கூறியுள்ளார்.

கோபம் கொள்ளுதல், இன்சொல் பேசுவதால் ஏற்படும் சாதக பாதக நிலைகள் விளக்கப்பட்டுள்ளன. நன்றி மறவாமை, நல்லோர் நட்பு, பொறுமையால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் சமூகஜோதி எடுத்துக்காட்டியுள்ளார்.

பாடசாலை பிரார்த்தனைகளின் போது மாணவர்களுக்கு எடுத்துக் கூறக் கூடியதான நற்சிந்தனைக் கருத்துக்கள் பலவும் இந்த நூலில் காணப்படுகின்றன.

**வி.பி.சர்மா**

அத்துடன் விநாயகர், முருகன், சிவன், பார்வதி ஆகியோரை நினைந்து ஓதக்கூடியதான பஜனை பாடல்கள், நாமாவழிகள் என்பனவும் நூலில் சேர்க்கப்பட்டுள்ளன.

காலத்தின் தேவைகருதி வெளியிடப்பட்டுள்ள இந்நூலை பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், சைவ மக்கள் அனைவரும் வாங்கிப்படித்து வாழ்வை அறநெறியில் அமைத்துக் கொள்ளவேண்டும்.

☆

**நூல்வரிசை**


# வெளிநாட்டுப் பயண மோசடியை தடுப்பதற்கு 'இன்ரபோல்' உதவி

இலங்கைப் பிரஜைகளை சட்ட விரோதமான முறையில் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும் கும்பல்களின் மோசடிகளைத் தடுப்பதற்கு 'இன்ரபோலின்' உதவி பெறப்படவுள்ளது. இது தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவிருப்பதாக குற்றப்புலனாய்வு பணியகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய வர்த்தக பெரும்புள்ளிகள் சிலரும் பாதாள உலக கோஷ்டியினரும் வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமாக ஆள்களை அனுப்புவதில் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளதாகவும் -

இவர்களின் நடவடிக்கைகள் இனிமேல் இன்ரபோலின் உதவியுடன் முறியடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாகவும் - கூறப்பட்டது. (ஒ-4-12)

# பொது நிகழ்வுகளில்...



விஷ்ணு மண்டப பூசை என்ற நூலின் வெளியீட்டுவிழா அண்மையில் வண்ணை ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் ஆலயத்தின் லக்ஷ்மி நாராயணன் மண்டபத்தில் நடைபெற்றது. 'நியந்திரி' அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள மேற்படி நூலின் முதற் பிரதியை பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயரிடமிருந்து வல்லிபுர ஆழ்வார் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ க.புருஷோத்தமக் குருக்கள் பெறுவதைப் படத்தில் காணலாம். அருகில் சிவாச்சாரியார்கள் காணப்படுகின்றனர். (எ)




ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுபெற்ற காரைநகர் பகுதி மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபையினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த வைபவத்தில் உயர்பெறுபேறு பெற்ற மேற்படி வித்தியாலய மாணவி சூரியகலா சுந்தரேஷ்வரனுக்கு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.கனேஸ்வரன் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் நல்லியக்கச் சபைச் செயலாளர் எஸ்.பத்மநாதன், வித்தியாலய அதிபர் பண்டிதர் சு.வேலாயுதபிள்ளை ஆகியோர் காணப்படுகின்றனர். (எ-8-73)



வடமராட்சி கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியில் நடத்திய தலையலங்கார கண் காட்சியை முறைசாராக் கல்விப் பிரிவு பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.நந்தகுமார். நாடாவை வெட்டி திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

அருகில் பயிற்சி நெறிப் போதனாசிரியை திருமதி எஸ்.அம்பிகைபாகன், வடஇந்து மகளிர் கல்லூரி அதிபர் செல்வி அ.கனகரத்தினம் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ-8-173)



நீர்வேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய லொறி ஒன்று உடற்கோப்பு வேலைகள் நடைபெற்று அண்மையில் வெள்ளோட்டம் விடப்பட்டது.

இது தொடர்பான நிகழ்வில் கலந்து கொண்ட யாழ்.கூட்டுறவு உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், சங்கத் தலைவர் அ.த.க.கிருஷ்ணராஜா மற்றும் இயக்குநர் சபை உறுப்பினர்கள், பொது முகாமையாளர், ரமணி உடற்கோப்பு நிறுவன உரிமையாளர் ஆகியோரைப் படத்தில் காணலாம். (எ-8)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கோழிகள் (Broilers) விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு தினங்களில் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: 85, செம்மணி வீதி (கல்விக்கந் தோருக்கு அருகில்), நல்லூர்.(3632)

Broiler மற்றும் இறைச்சிக்கோழி கள் சுகாதார முறையில் சுத்தம் செய்து தேவையான நிறைகளில் தின மும் பெற்றுக்கொள்ளலாம். 19,முரு கேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தை படி, நல்லூர். (3532)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. 1Kg 190/=. சுத்தம செய்தல் இலவசம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, கட்டப் பிராய். (3672)

## தவறிவிட்டது

அளவெட்டி தெற்கு, அளவெட்டி என்னும் முகவரியைச் சேர்ந்த சுந் தரம் விமலாதேவி என்பவரது தேசிய அ.அட்டை (இல.687082621v) கொக்கு வில் மேற்கு, கேணியடிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சென்ற் ஆன்ஸ் கொம்யூனிக்கேசன், அடைக்கலநாயகி வீதி, உயரப்புலம், ஆனைக்கோட்டை என்னும் முகவரி யில் ஒப்படைத்துதவவும். (3663)

## திருமண சேவை

மணமகனா? மணமகளா? உள் நாடா? வெளிநாடா? எத்தகைய மண மக்களானாலும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். திரு.எம். பொன்னுத் துரை, ஹரேகிருஷ்ணா திருமண சேவை, பெரிய மதவடி, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். (3056)

1975ஆம ... நடி, ...தரம் நட் சத்திர, செவ்வாய்க்குற்றமற்ற, கனடா வில் இருந்து வந்து நிற்கும் மண மகனுக்கு மணமகள் தேவை. போகும் போது கூட்டிச் செல்வார். படத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திரு மண சேவை, 178,நாவலர் வீதி, யாழ்ப் பாணம். (3664)

## வாடகைக்கு

யாழ்.பருத்தித்துறை வீதியில் நீர் வேலிச் சந்திக்கண்மையில் சகல வசதிகளுடன் கூடியதும் 2000 சதுர அடி விஸ்தீரணமுடையதுமான வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: விளம் பர.இல.1514 மே/பா உதயன். (3667)

## தேவை

யாழ்நகரப் பகுதியில் அல்லது நகரிலிருந்து 3Km சுற்றாடலில், பிர தான வீதியில் அமைந்துள்ள வசதி யுடன் கூடிய கடை வாடகைக்குத் தேவை. தொடர்பு:- M.சுரேஷ், 54/12, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம் T.P.No:3115. (3659)

## விற்பனைக்கு

பல இன கலர் மீன்கள், மீன் தொட டிகள், மீன்தொட்டிக்குரிய மோட் டர்கள், அழகுசாதனப் பொருள்கள் விற் பனைக்கு உண்டு. தொடர்பு:40/17, சீனியர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (3571)

62 நாள்கள் நிரம்பிய ஆண், பெண் அல்சேஷன் நாய்க்குட்டியும், 14 மாதங் கள் நிரம்பிய ஆண் நாயும், பால் சணல் ஆடு கடாய்க்குட்டியுடன் விற் பனைக்கு உண்டு. செல்வநாயகம் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (3596)

நல்லின, பூச்சி நீக்கப்பட்ட டாஸ் கவுண்ட் (DASH HOUND) நாய்க்குட்டி கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 70(34), கோயில் வீதி, யாழ்ப்பாணம். (3617)

ஏழாலை மயிலங்காடு றோட்டில் (பெரிய சங்கம் அருகில்) 2 1/2 பரப் புக்காணி. கடைக் கட்டடத்துடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.யோக லிங்கம் (மில்), ஸ்ரேசன் றோட், ஏழாலை. (3656)

வெல்டிங் கராஜுக்குரிய ஆயுதங் கள் யாவும் விற்பனைக்கு உண்டு. தேவைப்படுவோர் நேரில் தொடர்பு கொள்ளவும். இ.துரைரட்ணம், இல. 70/21 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். (3649)

பாவிக்கப்படாத புத்தம் புதிய லாண்ட்மாஸ்ரர் பெட்டி ஒன்று உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த.நாகேஸ்வரன் (பாப்பா) மானிப்பாய் வீதி, உரும்பிராய் மேற்கு, அம்மன் வீதி முகப்பு, உரும்பிராய் (3641)

மரத்தளபாட மேசைகள், கபேட், அலுமினியம் கண்ணாடியுடன் சோக் கேஸ்கள், படங்கள், புதிய தாய்வான் பிறேம் தடி வகைகள், கண்ணாடி மேசை என்பன விற்பனைக்குண்டு. 216,நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இலுப்பையடி சந்திக்கு அருகில்) (3662)

பாவித்த பொருள்களான Yamaha Electronic Organ (4 octave), Godreg Telephone - 2, walker நடப்பதற்கு உபயோகிப்பது, White Writing Board - 3 என்பன விற்பனைக்கு உண்டு. கிழமை நாள்களில் பார்வை யிடலாம். தொடர்பு: 28, சோமசுந்தரம அவன்யு, சுண்டுக்குளி. (3668)

## நெசவாலைகளை மீண்டும் இயக்குமாறு கோரிக்கை

வலிகாமம் தெற்கு,மே12

சங்கானை, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில் முன்னர் இயங்கிய நெச வாலைகளை மீண்டும் இயங்கவைப் பதற்கு ஏற்பாடுகளைச் செய்துதரு மாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

கோண்டாவில் புடைவை நெச வாளர் சமாசத்தின் முன்னாள் தலைவர் க.திருச்சிற்றம்பலம் கைத்தொழில் அமைச்சரிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் அமைச்ச ருக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார். (எ-152)

## அரைநிரந்தர வீடுகள் அமைப்பு

வலி.மேற்கு,மே12

தெல்லிப்பழை, பொன்னாலை ஆகிய இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து சங்கானைப் பகுதிகளில் உள்ள முகாம்களில் தங்கியிருந்த 80 குடும்பங்களுக்கு சங்கானைப் பிர தேச செயலகத் திட்டமிடல் பகுதியின ரால் 80 அரை நிரந்தர வீடுகள் அமைத் துக் கொடுக்கப்பட்டுள்ளன.

யு.என்.ஏச்.சீ.ஆர். மற்றும் 'றான்' ஆகிய அமைப்புக்களின் உதவியுடன் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா ஐம்பதாயிரம் ரூபா செலவில் அரை நிரந்தர வீடுகள் அமைத்துக்கொடுக் கப்பட்டுள்ளன. (எ-175)

## கட்டுடை சனசமூக நிலையம் புனரமைப்பு


சண்டிலிப்பாய்,மே12

கட்டுடை சனசமூக நிலையம் வலி.தென்மேற்கு பிரதேச சபையி னால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைப் பயன்படுத்தி புனரமைப்புச் செய்யப் பட்டுள்ளது.

நிலையக் கட்டடம் வர்ணம் (பெயின்ற்) பூசப்பட்டு புதிய மெருகு டன் காட்சியளிக்கின்றது. (எ-135)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 15 - 03 - 1925



இறப்பு 12 - 04 - 2002

### அமரர் ஆழ்வாப்பிள்ளை சின்னத்துரை

இப்புவியை நீ நீத்து எமை விட்டுத்தான் பிரிந்து
முப்பதுடன் ஒரு நாள் முடிந்ததையா!
செப்பரிய செயற்றிறனும் செய்தபல நற்செயல்களும்
எப்படித்தான் எம் நினைவை விட்டகலும்?
முப்பொழுதும் எமைக்காத்த தெய்வமே அப்பா!
எப்பொழுதும் எம் நெஞ்சில் நீ இருப்பாய்.

*82/8, 3ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.* (3674)

*பிரிவால் துயருறும்:* குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### வ. இ. நடனசிகாமணி

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட வ.இ.நடனசிகாமணி (R.V.G.மணியண்ணா) 09.05.2002 வியாழக்கிழமை அகால மரண மடைந்தார்.

இவர் காலஞ்சென்ற வ.இராமசாமிப்பிள்ளை - இராசம்மா ஆகியோரின அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும் கலாராணி, காசிலிங்கம், நடராஜலிங்கம், செல்வராணி, காலஞ்சென்ற பாக்கியலிங்கம் மற்றும் சந்திரலிங்கம், சண்முகலிங்கம், விஜயலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் நாராயணமூர்த்தி, கிருஷ்ணகுமாரி, சாந்தினி, ரவீந்திரதாஸ், சீலாவதி, யசோதா, அனுஜா ஆகியோரின் மாமனாரும் செந்தூர்க்குமரன், வீரசுந்தரி, ஞானகுரு, திவாகரன், மனோஜ்கரன், தினேஷ், தீபிகா, ராகுல், வசந்தராணி, சோபனா, சங்கீதா, தர்சினி, நிருஜன், தனுஜன், பிரதோஸ், சேஷாந்த் ஆகியோ ரின் அன்புப் பேரனும் ஆனந்தவேல், கமலாம்பிகை, மகேஸ்வரி, வைத்திலிங்கம், இரத்தினசிகாமணி, காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் மற்றும் தங்கேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் கோயிலடி, வல்வெட்டித்துறை.* (3673)

தகவல்: பிள்ளைகள்.

### திருமதி சிவக்கொழுந்து அரியபுத்திரர்

நயினாதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி சிவக்கொழுந்து அரியபுத்திரர் 10.05.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.05.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தில்லைமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*3ஆம் வட்டாரம், நயினாதீவு.* (3670)

*தகவல்:* நா.சண்முகநாதன(J.P.) (பெறாமகன்)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

HAPPY



BIRTHDAY

### செல்வன் தாரகன்

லண்டனில் வசிக்கும் **யசீசன் - ஸ்ரீரஞ்சனி** தம்பதிகளின் செல்வப் புதல்வன் **தாரகன்**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (12.05.2002) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் உள்ள தனதில்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, மீசாலையில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, லண்டனில் வசிக்கும் இரத்தினகுமார் பெரியப்பா, விஜயரஞ்சினி பெரியம்மா, ஹொலண்டில் இருக்கும் சோதீஸ்வரன் பெரியப்பா, நவரஞ்சினி பெரியம்மா, கனடாவில் வசிக்கும் ஸ்ரீகாந்தன் பெரியப்பா, நந்தினி பெரியம்மா, லண்டனில் வசிக்கும் வேணு மாமா, மைதிலி மாமி குடும்பம், ஜேர்மனியில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா, அத்தை குடும்பம், அக்காமார், அண்ணாமார், மைத்துனிமார் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

*"பிருந்தாவனம்", மீசாலை மேற்கு, மீசாலை.* (3658)

**லயன் சி.சற்குணநாதன்** (அம்மப்பா)

## நான்காவது வருட நினைவஞ்சலி

மலர்வு 12 - 07 - 1928



உதிர்வு 25 - 04 - 1998

### திருமதி மகேசுவரி சரவணமுத்து

*(ஓய்வுபெற்ற அதிபர், உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை)*

திதி:- 12.05.2002 ஞாயிற்றுக்கிழமை

***போற்றுகின்றோம்***

உரும்பிராய் தனிலுதித்த உத்தமியாள், ஆசிரியை,
விரும்புமகேஸ் வரியம்மை, வித்தைமிகு கவிஞர்பிரான்
அரும்புகழ் சேர் "சாரதா"தன் அணிமனையாள், அன்னவரின்
பெருந்தவமார் சேவைதனைப் பெரிதுவந்து போற்றுகின்றோம்.

*"மகேசுவரம்" உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.* (3661)

மக்கள், மருகர், பேரர், சகோதரர், உறவினர்.

## 21ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 - 01 - 1948



மறைவு 15 - 04 - 1981

### திருமதி அ.கமலாதேவி(B.A.)

(அபிவிருத்தி உத்தியோகத்தர்)

திதி: 03.05.2002

அன்பின் திருவுருவாய்
பண்பின் பிறப்பிடமாய் விளங்கி
எம்மை விட்டுப் பிரிந்து
எத்தனை ஆண்டுகள் சென்றிடினும்
உங்கள் நினைவு என்றும்
எம்முன் உயிர் வாழும்.

உங்கள் பிரிவால் வாடும்:
தாயார், சகோதரன், மைத்துனி, மருமகன், மருமகள், சகோதரர்கள், சகோதரிகள், சிறியதந்தைமார், சிறியதாய்மார், மாமன்மார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார்.

*"அக்கா அகம்", இணுவில்.* (3666)

# கணிதபாட கற்பித்தல் குறித்த செயலமர்வு

யாழ்ப்பாணம்,மே12

ஆரம்ப வகுப்புக்களில் கணித பாடம் கற்பித்தலில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான 5 நாள் செயலமாவு நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமானது.

மனிதவள அபிவிருத்தி, கல்வி கலாசார அமைச்சு, இலங்கை தேசிய கல்வி நிறுவகம் மற்றும் தொழில் சார் அபிவிருத்தி கல்வி முகாமைத் துவத்துக்கான நிலையம் ஆகியன இணைந்து இந்த செயலமர்வை ஏற்பாடு செய்துள்ளன.

எதிர்வரும் 15ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறவுள்ள இந்த செயலமர்வில் ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இலங்கை தேசிய கல்வி நிறுவனத்தின் ஆரம்ப கணித பாட செயல் திட்ட அதிபர் எம்.சிப்லி, வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.இராதாகிருஷ்ணன் மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த எஸ்.முகுந்தன் ஆகியோர் இச செயலமர்வை நெறிப்படுத்துகின்றனர்.

(ஒ-4)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே12

யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடவிருக்கும் பரீட்சகர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

கணிதப் பிழையின்மையை உறுதி செய்யும் அறிவுறுத்தல்கள் இக்கலந்துரையாடலில் வழங்கப்படவிருக்கின்றன.

பிரதி பரீட்சை ஆணையாளர் ஆ.சிவலிங்கம் இக்கலந்துரையாடலில் பங்குபற்றுகின்றார். (ம-3)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொடிகாமம் அ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

அனைத்துப் பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார்.

(ம-3)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
விஜயகாந்த், மீனா, மனோரமா, மணிவண்ணன் நடித்த
பெரியண்ணா
தினசரி காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பு.நே.)
(C-21981)

லஷ்சுமி இணுவில்.
ரஜனி, நக்மா, ரகுவரன் நடித்த
பாட்ஷா
(சினிமா)
காட்சிகள்-10.30,2.30 (ப.நே.)
(3686)

ராஜா யாழ்ப்பாணம்
5ஆவது ஜனத்திரள் வாரம்
இளையதளபதி விஜய், உலக அழகி பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன்
தினசரி: 10.30, 2.30
சனி, ஞாயிறு: 10.30, 2.30, 5.30 (பு.நே.)
(C/21980)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜயகாந்த் (இருவேடங்கள்) சிம்ரன், நாசர், கபாலி நடிப்பில்
கண்ணுபடப்போகுதையா
(சினிமா)
காட்சிகள்: 11.00,3.00,6.30 (பு.நே.)
(3681)

லாலா
சோப்
போட்டி
மாணவர்களே!
போட்டியை எதிர்பாருங்கள்!
10பேருக்கு
குலுக்கல் முறையில்
பெறுமதிமிக்க பரிசுகள்.
(C/22064)

மிகு நுட்பமானதும்
திட்டமிடப்பட்டதுமாக




சாத்தியமான கட்டணச் சலுகையுடன்
கணனி மூலமான செய்முறை விளக்கங்கள்
தகுதி மிக்க கணனிப் பட்டதாரி ஆசிரியர்கள்
அதிகளவான செய்முறை நேரம்
அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
அனைத்து வகுப்புக்களும்
ஆரம்பமாகின்றன

Dip. in Computer Studies
Dip. in MS Office
Dip. in Desktop Publishing
Dip. in Hardware
Dip. in Software Management
Dip. in Software Developing

Certificates Courses
Visual Basic
Java Programing
Page Maker
CorelDRAW
Photoshop

பதிவுகள் 24-05-2002 வரை

பதிவுகளிற்கும், மேலதிக விபரங்களிற்கும்
STP Your Partner in IT Solutions
54A, Palaly Road, Jaffna T.P: 2674, E.mail: stpedu@slt.lk

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தசாமி கனகமலர்

நாகம்மா கோயிலடி உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கனகமலர் 10.05.2002 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும் இராசமலர், தேம்பாமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் க.கதிர்அனுஷனின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2002) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகம்மாள் வீதி,*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*

தகவல்:
க.கதிர்அனுஷன் (மகன்)

(3690)

## திருமதி சின்னம்மா இளையதம்பி

தென்புலோலியூரைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி இளையதம்பியின் அன்பு மனைவி சின்னம்மா நேற்று (11.05.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னம்மா, பூரணம், முருகேசு (இளைப்பாறிய இ.போ.ச. காப்பாளர்), பார்வதி (இரத்தினம்), கந்தசாமி (இளைப்பாறிய இ.போ.ச. காப்பாளர் - தற்போது கனடாவில் வசிப்பவர்), கிட்டினபிள்ளை (அஞ்சல் ஊழியர், இராமநாதபுரம்), பாக்கியம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற மார்க்கண்டு தம்பியப்பா (ஏழாலை), மனோன்மணி (கனடா), மாணிக்கவாசகர் (புலோலி), செல்வராணி (கனடா), மனோரஞ்சிதம் (அக்கராயன்), மயூரகிரிநாதன் (அச்சுவேலி, வலி.கிழக்கு, ப.நோ.கூ.ச. ஊழியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெருந்தெரு,*
*புலோலி தெற்கு,*
*புலோலி.*

தகவல்:
இ.முருகேசு (மகன்)
(இளைப்பாறிய இ.போ.ச.காப்பாளர்)

(C/22086)

## திருமதி நாகப்பர் சிவகாமி

துன்னாலை மேற்கு, மித்தில் கரையைச் சேர்ந்த திருமதி நாகப்பர் சிவகாமி நேற்று (11.05.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகப்பரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தர், நாகமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்லாச்சி, வேலாயுதம், கந்தசாமி (ஓய்வுபெற்ற மேல்நீதிமன்றப் பதிவாளர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, தங்கமுத்து, இராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியும் கமலாவதி, கணேசமூர்த்தி, சச்சிதானந்தமூர்த்தி, இராதாகிருஷ்ணன், கண்ணாம்பாள், கோமதி, கமலேஸ்வரன், ஜீவதாஸ், Dr.அரவிந்தன், Dr.உமாசங்கர், இந்திராஜ், பிரிந்திகா, மாலதி, சுதர்சினி, யசோதா ஆகியோரின் பாசமிகு பாட்டியாரும் Dr.குகசிவன், கடம்பன், தனாளன், கௌரி, நிதாகரன், பிரதீனா, பகீரதன், லம்போதரன், வாகீசன், லோகினி, வித்தியா, சிவலோகன், குகதீஸ்வரன், சநூசா, கார்த்திகேயன் ஆகியோரின் அருமைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.30. மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேருண்டை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துன்னாலை மேற்கு,*
*கரவெட்டி.*

தகவல்:
நா.கந்தசாமி (மகன்)

(C/22088).

## தம்பிப்பிள்ளை வைகுந்தர்

**(முன்னாள் பிரபல வர்த்தகர், கைதடி)**

கைதடி மத்தியைப் பிறப்பிடமாகக்கொண்ட தம்பிப்பிள்ளை வைகுந்தர் நேற்று (11.05.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லமுத்துவின் அன்புக் கணவரும் அரியகுட்டி சின்னப்பிள்ளையின் அருமைச் சகோதரனும், விஷ்ணுதேவியின் அன்புத் தகப்பனாரும் புஸ்பராசாவின் அன்பு மாமனாரும் சிவகண்ணன் (லண்டன்), ஸ்ரீரங்கநாதன் (லண்டன்), சிவறஞ்சனி, றாஜிகா, தவறஞ்சனி, பதிவர்ணன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2002) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கைதடியில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி மத்தி, கைதடி.*

தகவல்:
த.விஷ்ணுதேவி (மகள்)

(3691)

# 5ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர்
**காராளபிள்ளை விநாயகசிவம்**
(கண்ணன்)

விண்ணிலிருந்து
நயினை மண்ணில்
1967-11-01

பாரிஸிலிருந்து
பரந்த விண்ணில்
1997-05-06

*பாரினில் பாலகனாய் பிறந்து*
*பாரிஸினில் பல காலம் வாழ்ந்து*
*பரமனடி சேர்ந்தாயோ?*
*பரிதவிக்கின்றோம் உம் பிரிவால்*
*காலங்கள் பல சென்றாலும்*
*கவலையது தீராது*
*கடவுளை யாசிக்கின்றோம்*
*கண்ணா! நீ மீண்டும் எம்முடன் சேர*
*காண நீ வாராயோ?*
*கவலைகள் தீராதோ?*

*நா.காராளபிள்ளை,*
*"விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ்"*
*6ஆம் வட்டாரம், நயினாதீவு.*

பிரிவுத்துயரால் வாடும்,
குடும்பத்தினர்.

(3605)

## மெய்வன்மைச் சங்க விரிவுரைகள் இன்றும் நடக்கும்

ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மை சங்கத்தின் தொழில்நுட்ப அதிகாரிகளின் மெய்வன்மைச் சட்டவிதிகள் தொடர்பாக நேற்று ஆரம்பமான விரிவுரைகள் இன்றும் காலை 9.30மணி முதல் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்க செயலாளர் பி.எச்.டி.வைத்தியதிலக, தொடக்குநர் என்வைரவநாதன் ஆகியோர் நேற்றுப் பயிற்சிகளையும் விரிவுரைகளையும் வழங்கினர். இன்றைய விரிவுரையில் இவர்களுடன் தொழில்நுட்ப அதிகாரியான எஸ். தெய்வேந்திரனும் பங்குபற்றுவார்.

நேற்று நடந்த இந்த விரிவுரையில் பெரும் எண்ணிக்கையானவர்கள் பங்கேற்றனர். (ம-3)

### யாழ்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவியேற்றதாகப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனையிறவு முகாம் வீழ்ச்சிக்குப் பின்னர் பொன்சேகா யாழ். படைகளின் தளபதியாக பொறுப்பேற்றிருந்தார். பின்னர் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

### அரசின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

தேசிய அரசில் நான் எந்தப் பதவிகளையும் எதிர்பார்க்கப்போவதில்லை. புலிகள் மீதான தடை நீக்கபட்டவுடன், வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்காக பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

பேச்சுக்களை பின்போடுவது புலிகளை பலப்படுத்திவிடும். அரசின் சமாதான முயற்சிகள் காரணமாக தென்பகுதி மக்கள் இப்போது வடக்கு - கிழக்கிற்கு விஜயம் செய்யும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

யுத்த செலவு குறைக்கப்பட்டிருப்பது மிகவும் பாராட்டுக்குரியது - என்றார். (ம-6-9)

### தெற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் சார்பில் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், நிர்வாகப் பொறுப்பாளர் தங்கன் மற்றும் தொல்காப்பியன் ஆகியோரும் பங்குபற்றினர். அங்கு முடிவான முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ கண்டி வீதியை 24 மணி நேரமும் போக்குவரத்துக்கு திறந்து விடுவதற்குப் புலிகள் தயாராக இருக்கின்றனர். ஆனால், அதற்கு அரசுத்தரப்பு தயக்கம் காட்டுகின்றது. இது தொடர்பாக அரசுக்கு அழுத்தம் கொடுப்பது.

★ தீவகத்தில் விடுதலைப் புலிகள் தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று அரசுக்கு அழுத்தம் கொடுப்பது.

★ புரிந்துணர்வு உடன்பாட்டில் உள்ள சரத்துக்களை முறைப்படி நடைமுறைப்படுத்தும்படி அரசுக்கு வேண்டுகோள் விடுப்பது.

★ சிறைச்சாலைகளிலுள்ள தமிழ்க் கைதிகளை விடுவிப்பது குறித்து நடவடிக்கை எடுப்பது.

★ கோயில்கள், பாடசாலைகளில் உள்ள படையினரை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பது.

★ கடற்படையினரின் அத்துமீறல்கள் குறித்து பிரதமருக்கு முறையிட்டு நடவடிக்கை எடுப்பது.

★ வடக்கே வரும் சிங்கள மக்களுக்கு தெருக்கூத்து, சிங்களப் பிரசுரங்கள் மூலம் தமிழ் மக்களின் நிலையை விளக்குவது.

★ உடன்பாட்டில் உள்ள விடயங்களை மக்களுக்கு விளக்குதல்.

★ மாதம் ஒரு தடவை கூட்டமைப்புப் பிரதிநிதிகளும் புலிகளும் சந்தித்துப் பேசுவது. (ம-3-6-9)


நாளை ஆரம்பம்

விக்னா கல்வி நிறுவனம்

பிரிவு 5

O/L DAY CLASS (8.30 - 1.30)

* பழைய பாடத்திட்டம் புதிய பிரிவு ஆரம்பமாகிவிட்டன.
* இவ்வருடம் 6 பிரிவு மட்டுமே.

(3682)


## பாதுகாப்பு, கல்வி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இக்குழுவினர் மட்டக்களப்பு உட்பட கிழக்கு மாகாண பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளதாகவும் கூறப்பட்டது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் பாடசாலைகள், வணக்கத்தலங்கள், பொது இடங்கள் ஆகியவற்றில் நிலை கொண்டுள்ள படையினர் அவற்றில் இருந்து வெளியேறவேண்டும். இதற்கான கால [illegible] யை இராணுவம் 30நாளகளுக்கு வெளியிட்டிருக்க வேண்டும்.

ஆனால், யுத்தநிறுத்த ஒப்பந்தம் செயற்படத் தொடங்கி 2 மாதங்களுக்கு மேலாகிவிட்ட போதிலும் பாடசாலைகள், வணக்கத்தலங்கள், பொது இடங்கள் என்பவற்றில் நிலை கொண்டுள்ள படைகள் அவற்றில் இருந்து இன்னும் வெளியேறாமல் இருப்பது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறும் நடவடிக்கையாகுமென விடுதலைப்புலிகள் அரசுமீது குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இது தொடர்பாக பல தடவைகள் விடுதலைப்புலிகள் போர்நிறுத்த சர்வதேச கண்காணிப்புக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிகின்றது. (ம-6)

### தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதாகைகளையும் அட்டைகளையும் பிக்குகள் தாங்கிச் சென்றனர்.

பேரணியை அடுத்து மாநகர சபை கேட்போர் கூடத்தில் கூட்டம் ஒன்றையும் பிக்குகள் நடத்தினர்.

நாட்டின் இறைமைக்கு விரோதமாகச் செயற்படும் நோர்வேயை வெளியேற்றவேண்டும் என்றும் -

விடுதலைப் புலிகளிடம் நாட்டை கைளிக்க வேண்டாம் என்றும் -

அங்கு உரையாற்றிய பிக்குகள் கருத்துத் தெரிவித்தனர். (ம-3-6)

### காலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 5 மணி வரை போக்குவரத்து இடம்பெற்றது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை -

கண்டி வீதிப் போக்குவரத்தை காலை 6மணிமுதல் மாலை 6 மணி வரை அனுமதிக்க படையினரும் விடுதலைப் புலிகளும் இணங்கியுள்ளதாக இணையத் தளச் செய்தி ஒன்று தெரிவித்தது.

கண்டி வீதி ஊடாகத் தனியார் பஸ்கள், பயணிகள் போக்குவரத்தை மேற்கொள்ள இதுவரை இணக்கம் ஏற்படவில்லை என்றும் -

இது தொடர்பான முடிவு எடுப்பதை பத்துத் தினங்களுக்கு ஒத்தி வைத்திருப்பதாகவும் -

தனியார் பஸ் சேவைகள் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

போக்குவரத்து சபையின் பத்து பஸ்கள் சேவையை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளதாக அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்தது. (ம-3)


யாழ். பல்கலைக்கழக அனைத்து வீடுதி மாணவர் ஒன்றிய
வறிய மாணவர்களின் வளர்ச்சி நிதிக்காக
யாழ். பல்கலைக்கழக மாணவர்களும்
யாழ். முன்னணி இசைக்கலைஞர்களும் இணைந்து வழங்கும்

பரதநாட்டிய நிகழ்வும் இன்னிசை கானங்களும்

இடம் - யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு
காலம் - இன்று (12.05.2002) ஞாயிற்றுக்கிழமை
நேரம் - காலை 10மணி, பிற்பகல் 2.30மணி

அன்பளிப்பு 50/-, 100/-

அனைத்து விடுதி மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(3654)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 15 - 07 - 1944



ஆண்டவன் அடியில் 23 - 04 - 2001

### அமரர் செல்லையா தங்கராசா (மாயவர்)

எங்கள் அன்பு அப்பாவே!

*ஆண்டொன்று ஓடி மறைந்துவிட்டதப்பா*
*உங்கள் இனிய அன்பு முகம் மறைந்திடுமோ?*
*எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும் கூட*
*உங்கள் நினைவுகள் நெஞ்சைவிட்டு நீங்காதப்பா*
*வருடங்கள் உருண்டோடும் வயதாக கூடும்*
*உங்கள் மீது நாம் கொண்ட அன்பு மாறாதப்பா*
*உங்களை விட்டுப் பிரிந்து சென்றோம் - அது சோகத்திலும்*
*நீங்கள் இருக்கிறீர்கள் என்ற சுகமான சுமையப்பா*
*இன்று நீங்கள் மறைந்துவிட்டீர்கள் அது கொடுமையான சுமையப்பா*

இன்று (12.05.2002) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*விளையாட்டரங்கு வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

*பிரிவால் வாடும்:*
மனைவி, பிள்ளைகள்.

(3665)

## மரண அறிவித்தல்

### வ.இ.நடனசிகாமணி

(R.V.G. பீடிக் கம்பனி)

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும் என இன்றைய 8ஆம் பக்கத்தில் விளம்பரம் பிரசுரமாகியுள்ளது. ஆனால் தவிர்க்கமுடியாத காரணத்தால் இன்று (12.05.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் வல்வை ஊரணி மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*அம்மன்கோயிலடி,*
*வல்வெட்டித்துறை.*

தகவல்:
வ.இ.ரத்தினசிகாமணி
(சகோதரன்)

(3687)


நீங்கள் A/L-2002 பரீட்சை எடுத்துவிட்டீர்களா ? ........
கணனித்துறையில் நீங்கள் ஓர் வல்லுநராக........ IIS உடன் இணைந்து கொள்ளுங்கள்

Computer Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் : 19/05/2002 ஞாயிறு காலை 10.00 மணி

| Courses | Duration (Month) |
|---|---|
| Diploma in MS Office | 5 |
| Diploma in Internet Technology | 4 |
| Diploma in Java Programming | 5 |
| Diploma in Visual C Programming | 5 |
| Diploma in Visual Basic Programming | 5 |
| Diploma in Engineering Drawing and AutoCAD | 5 |
| Technician Diploma in Computer Hardware | 6 |
| Diploma in Computer Programming | 8 |
| Diploma in Personal Computer Specialist | 8 |
| Advanced Diploma in Applied Computer Science | 12 |

A/L – 2002 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு மட்டும்

Diploma in MS Office

Rs. 2750/=

IIS அகில இலங்கை ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் அங்கீகாரம் பெற்று வடக்குக் கிழக்கில் முன்னணி வகித்துவரும் கணனி நிறுவனம்.

✓ பயிற்சி நெறிகள் அனைத்தும் வார நாட்களிலும், வார இறுதி நாட்களிலும் நடைபெறும்
✓ தகுதி, அனுபவம், திறமை வாய்ந்த விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை.
✓ நவீன கணனித் தொழில்நுட்ப வசதியுடன் கூடிய ஆய்வுகூடம்.
✓ Multimedia Projector வசதி கொண்ட விரிவுரை மண்டபங்கள்.
✓ புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்த, விண்ணப்பிக்கத் தவறிய அனைத்து மாணவர்களுக்குமென ஆரம்பிக்கப்படும் பயிற்சி நெறிகள்
✓ பல்வேறு வகையில் கட்டணச் சலுகைகள்

Institute of Informatics Studies

I I S

Head Office:
100, Clock Tower Road, Jaffna.
☎ 021-2831 Email : iis@sltnet.lk

Branches:
Nelliyady Karaveddy.
Main Street, Chankanai.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.